விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 158 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 12 திங்கட்கிழமை (26.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழ் அரசியல் தலைவர்களிடம் ராஜபக்ஷர்கள் தோற்றம்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களிடம் தமிழ் ராஜ பக்ஷர்களை கண்டதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத்

15ஆம் பக்கம் பார்க்க

## காணி சுவீகரிப்புக்கு எதிராக வெற்றிலைக்கேணியில் இலவச சட்ட ஆலோசனை முகாம்

(யாழ்ப்பாணம்)

காணி சுவீகரிப்புக்கு எதிராக வெற்றிலைக்கேணியில் நேற்று இலவச சட்ட ஆலோசனை முகாம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கில் அரசுக்குக் காணி சுவீகரிக்கும் நோக்கத்துடன் வெளியிடப்பட்ட

02ஆம் பக்கம் பார்க்க




## அம்பாறை உகந்தை மலை முருகன் ஆலய சூழலில் புதிய புத்தர் சிலை

### நல்லிணக்கத்தைக் குழப்ப சதி எனக் குற்றச்சாட்டு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் உகந்தை மலை முருகன் ஆலய கடற்கரைச் சூழலில் உள்ள குன்றில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ள விவகாரம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## மோ.சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

### கிளிநொச்சி கணேசபுரத்தில் சம்பவம்

(கிளிநொச்சி)

நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் மோட்டார் சைக்கிள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

கிளிநொச்சி கணேசபுரம் முனியப்பர் ஆலயத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி அறிவியல்நகரில் ரயில் மோதியதில் இளம் குடும்பஸ்தர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல்நகர்ப் பகுதியில் புகையிரதம் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இச்சம்

15ஆம் பக்கம் பார்க்க



## சளி, இருமலால் கரவெட்டியில் இரண்டு மாத குழந்தை மரணம்

(கரணவாய்)

கரவெட்டியில் சளி, இருமல் காரணமாக இரண்டு மாத

15ஆம் பக்கம் பார்க்க

## பாரிய கொலை, ஊழலில் ஈடுபட்ட ராஜபக்ஷக்களின் அறிவுரை தேவையில்லை

### அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

(கொழும்பு)

பாரிய கொலைக் குற்றங்களை இழைத்து - ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு நாட்டைப் படுகுழியில் தள்ளிய ராஜபக்ஷக்களை மக்கள் எவரும் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள் என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

ராஜபக்ஷக்களைச் சிறைக்கு அனுப்புவதால் நாட்டு மக்களின்

15ஆம் பக்கம் பார்க்க



## 29ஆம் திகதிவரை வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதி

15ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி மன்றங்கள் ஜூன் 2ஆம் திகதி முதல் ஆட்சியை ஆரம்பிக்கலாம்

### தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் ஜூன் 2ஆம் திகதி முதல் தமது ஆட்சியை அதிகார பூர்வமாக ஆரம்பிக்கலாம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் அறிவித்துள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க

## சுகாதாரத் துறையில் வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

சுகாதாரத்துறையில் வசதிகள் மற்றும் தொழில்முறையை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தாதியர்கள் தங்கள் பணியினை மனிதாபிமானத்துடன் நிறைவேற்ற வேண்டும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் கலாநிதி

02ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்ததினத்தில் உலக சாதனை நிகழ்த்திய மூன்று வயதுச் சிறுமி

## ‘மழலை மொழி வித்தகர்’ பட்டமும் பெற்றார்





(சாவகச்சேரி)

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனமும்-தென்மராட்சி மக்களும் இணைந்து முன்னெடுத்த மூன்று வயதுச் சிறுமியான செல்வி ஜெயகரன் தஸ்விகாவின் உலக சாதனை நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் தங்கவேலு தலைமையில் இடம்பெற்றிருந்தது.

தனது மூன்றாவது பிறந்த தினமான நேற்று சிறுமி தஸ்விகா 1500 தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலப் பதத்தை மிக விரைவாகக் கூறி உலக சாதனையை நிலைநாட்டி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தார். தனது தாயார் தமிழ்ப் பதங்களைக் கூற அதற்கான ஆங்கிலப் பதங்களை மிக விரைவாகவும்-அதேநேரம் சுலபமாகவும் பதிலளித்து அவர் இந்த உலக சாதனையைப் படைத்திருந்தார்.

நிகழ்வில் கல்வியலாளர்கள், சமூக சேவையாளர்கள், சிறுமியின் உறவுகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

சிறுமியின் திறமையைப் பாராட்டி சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தினால் சிறுமிக்கு “மழலை மொழி வித்தகர்” எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


(ம-4,7,30)


ஊர் கோழிக் குஞ்சுகள்



ஒரு மாத, ஒரு கிழமை, ஒரு நாள் ஊர்க்கோழி குஞ்சுகளை தினமும் பெற்றுக் கொள்ளலாம்.
வான்கோழிச் சேவல்களும் விற்பனைக்குண்டு.
இடம் : சுழிபுரம்
077 332 2433
(1169)


# குஜராத்தை வீழ்த்தி சென்னை அபார வெற்றி




குஜராத் டைட்டன்ஸ் அணியை வீழ்த்தி 83 ஓட்டங்களால் சென்னை அபார வெற்றி பெற்றது.

18 ஆவது ஐ.பி.எல்.தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் இறுதிப்போட்டி அகமதாபாத்தில் நேற்று(25) நடைபெற்றது.

இதில் குஜராத் அணியை சென்னை எதிர்கொண்டது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ஆயுஷ் மாத்ரே - டெவான் கொன்வே களமிறங்கினர். அதிரடியாக விளையாடிய ஆயுஷ் மாத்ரே 17 பந்துகளில் 34 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக களமிறங்கிய உர்வில் படேல் 19 பந்துகளில் 37 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார்.

மறுபுறம்பொறுப்புடன்விளையாடிய டெவான் கொன்வே அரைச்சதம் அடித்து 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து களமிறங்கிய டெவால்ட் பிரேவிஸ் 19 பந்துகளில் அரைச்சதம் அடித்தார்.

இதன்மூலம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து 231 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் டைட்டன்ஸ் அணி களமிறங்கியது.

எனினும் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து குஜராத் டைட்டன்ஸ் தடுமாறியது.

இறுதியில் 18 ஓவர்கள் முடிவில் 147 ஓட்டங்களுக்கு குஜராத் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்மூலம் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

இது சென்னை அணியின் 4 ஆவது வெற்றியாகும். (ம-4)

# மரண அறிவித்தல்

மலர்வு
20 - 04 - 1952



உதிர்வு
20 - 05 - 2025

## சபாபதிப்பிள்ளை இரத்தினகுமாரன்

### (ஓய்வுபெற்ற கிராம அலுவலகர்)

யாழ்-மண்டைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 2ம் வட்டாரம், கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை இரத்தினகுமாரன் அவர்கள் 20.05.2025 செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா - அமிர்தம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் புனிதவதி அவர்களின் அன்புக் கணவரும் செந்தூரன், ஜெகத்ஜெனனி, புருஷோத்தமன், லகுஷியா, கௌதமன், சௌமியா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கோகிலவதனி மற்றும் கோட்டீஸ்வரன், மகரஜோதி, மைக்கேல், தாமரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கமலாதேவி, விஷயகுமாரன்(ராசு), காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் ஜெயகுமாரன், உதயகுமாரன், ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கனகநாதன் மற்றும் உதயராணி, நளாயினி, சுதர்சினி, காலஞ்சென்றவர்களான பிறகலாதன், இந்திரசேனன், மற்றும் பரஞ்சோதி, அகலிகை, ஊர்வசி, அருணகிரிநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஹரிஷ், ஆரியன், அஸ்மிதா, நிலான், மிலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

123/1 பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
[illegible]

(C-3047)

## வெற்றிலைக்...

வர்த்தமானியை இரத்துச் செய்வது தொடர்பில் நில உரிமையாளர்களைச் சந்தித்து சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யும் நோக்கில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையாக நில அபகரிப்பு பிரதேசத்தில் சட்ட நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கில் 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணியை அரச காணியாகச் சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை அரசு மீளப்பெற வேண்டும் எனக் கோரி மேற்கொள்ளவுள்ள சட்ட நடவடிக்கையின் முதல்கட்டமாக நில உரிமையாளர்களிடம் உள்ள ஆவணங்களைச் சீர்செய்யும் முகமாக இந்த நடமாடும் சட்ட உதவி இடம்பெறுகின்றது.

இதன் முதல் கட்டமாக வடக்கின் 4 மாவட்டங்களிலும் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் வெற்றிலைக் கேணி நில உரித்தாளர்களுக்குத் தேவையான, இலவச சட்ட உதவிகளை வழங்கும் அந்த இடத்துக்கே சட்டத்தரணிகள் குழாம் நேற்று நேரில் சென்றது. இதில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் சுமார் 25 சட்டத்தரணிகள் பங்கேற்றனர்.

வெற்றிலைக்கேணி ரம்போவிளையாட்டுக் கழக மைதானத்தில இந்தச் சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகள் இடம்பெற்றவேளை நூற்றுக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு சட்ட உதவிகளைப் பெற்றனர்.

(ம-4,7,13,316)

## சுகாதார...

ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

3,147 தாதியர்களுக்கு நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்ததாவது,

பொதுச் சேவையில் தாதியர்களாக இணைந்து, வாழ்க்கையில் புதிய பயணத்தைத் தொடங்கும் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். உலகின் மிக முக்கியமானதும் கௌரவமானதுமான தொழில்களில் ஒன்றில் நீங்கள் பிரவேசிக்கிறீர்கள்.

தாதியர் தொழில் என்பது மக்களுக்கு ஒரு அத்தியாவசியமான தொழில் என்பதற்கு அப்பாற்பட்ட ஒரு மனிதாபிமான சேவையாகும். நாங்கள் யாராக இருந்தாலும் சரி, உங்கள் பாதுகாப்பை நம்பி, தேவைப்படும் நேரங்களில் நாங்கள் உங்களிடம் வருகிறோம்.

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தாதியர்களுக்கு அதிக தேவை உள்ளது. உங்கள் தொழில்முறை கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான சம்பளம், தேவையான பதவி உயர்வுகள் மற்றும் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துவருகிறோம். மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் ஆரோக்கியமான ஒரு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான தொழிற் சூழலை உருவாக்குவது மிகவும் முக்கியம். இந்த எல்லா விடயங்களிலும் உங்கள் அமைச்சரும் அமைச்சும் தலையிடுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்றார். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 ஆண்டுகளின் பின் தீவிரமடைந்துள்ள சிக்குன்குனியா

## பேராசிரியர் நீலிகா மலவிகே



(கொழும்பு)

**இலங்கையில் சுமார் 16 ஆண்டுகளுக்குப் பிறகு சிக்குன்குனியா வைரஸ் நோய் பெரிய அளவில் பரவி வருகிறது. ஒக்ஸ்போர்ட் நானோபோர் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட மரபணு ஆராய்ச்சியில் இவ்விடயம் வெளிப்பட்டுள்ளதாக பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.**

தனது எக்ஸ் தளத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது பரவி வரும் சிக்குன்குனியா வைரஸ் இந்து சமுத்திரத்தில் பரவக் கூடிய வைரஸ் பரம்பரையைச் சேர்ந்தது. இது பல தனித்துவமான பிறழ்வுகளுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.


இலங்கை தற்போது 16 ஆண்டுகளுக்குப் பிறகு 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து ஒரு பெரிய சிக்குன்குனியா பரவலை எதிர்கொண்டு வருகிறது.

தற்போது பரவி வரும் சிக்குன்குனியா வைரஸ் பிறழ்வின் முழு மரபணு ஆய்வினை நாம் மேற்கொண்டோம்.

மேலும் அது தெற்காசியாவில் தற்போது பரவி வரும் பிறழ்வைப் போலவே இந்து சமுத்திர பரம்பரையைச் சேர்ந்தது என்பதைக் கண்டறிந்துள்ளோம்.

இந்த புதிய பிறழ்வுகளில் சில, முன்னர் வகைப்படுத்தப்படாததால், அவை கொசுக்களுக்குள் உடற்தகுதி, வைரஸ் பிரதிபலிப்பு மற்றும் நோயெதிர்ப்புத் தவிர்ப்பை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் கண்டறிவது முக்கியமானதாகும். (நி-8)

# 9 லட்சத்தைக் கடந்த சுற்றுலா பயணிகளின் வருகை



(கொழும்பு)

2025 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து மே மாதம் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 988,669 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 188,694 ஆகும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

# 3147 தாதிய உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு



(கொழும்பு)

புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 3147 தாதிய உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் நியமனக் கடிதங்கள் வழங்கிவைக்கப் பட்டன.

இது தொடர்பான அதிகாரப்பூர்வ விழா அலரி மாளிகை வளாகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றது.

நாட்டிலேயே அதிக எண் ணிக்கையிலான தாதியர் ஊழியர்களுக்கு ஒரே நேரத்தில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுவது இதுவே முதல் முறை.

அத்துடன் தாதியர் சேவையில் உள்ள 79 சிறப்பு தர அதிகாரிகளுக்கும் ஒரே நேரத்தில் பதவி உயர்வு வழங்கிவைக்கப்பட்டன .

இந்த நிகழ்வில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அமைச்சின் செயலாளர், சிறப்பு மருத்துவர் அனில் ஜாசிங்க மற்றும் அதிகாரிகள் குழுவும் பங்கேற்றனர். (நி-8)




மணிவிழா வாழ்த்துக்கள்



உயர்திரு. செல்லத்துரை பேரின்பநாதன் (SLPS-I)

(அதிபர், யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

- ஆசிரியர் சேவைக்காலம்
(01.04.1993 முதல் 20.06.1996 வரை)
- அதிபர் சேவைக்காலம்
(21.06.1996 முதல் 25.05.2025 வரை)

யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி இன்று 26.05.2025 மணிவிழாக்காணும் அதிபருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறையருளை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்

(4381)



மணிவிழா நாயகியை சேவை நயந்து வாழ்த்துகின்றோம்



திருமதி. கலாவேணி பாலகிருஸ்ணர் (SLTS-I)

சேவை விபரம்

- யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
(01.09.1992–14.02.2010)
- யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
(15.02.2010–23.05.2025)

எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவு ஆசிரியராகப் பணியாற்றி 26.05.2025 அன்று ஓய்வு பெறும் திருமதி கலாவேணி பாலகிருஸ்ணர் அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் பிரார்த்திக்கின்றோம்.


வாழ்த்துவோர் : ஆசிரியர் நல்லுறவுக்கழகம், யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை. (1168)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பாஷையூர் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி கிண்ணத்தை தனதாக்கியது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் பாஷையூர் சென்அன்ரனிஸ் விளையாட்டு கழகம் தமது 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய வடமாகாண ரீதியிலான அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது.




மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட இறுதிப்போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பமாகிய நிமிடத்தில் இருந்தே இரு அணிகளும் தமக்கே உரிய சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணியின் மத்தியகள வீரன் சிவதரனால் தனது அணிக்கான முதலாவது கோல் பெறப்பட்டது.

பதிலுக்கு தாமும் சளைத்தவர்கள் அல்ல என நிரூபிக்க சென்மேரிஸ் அணியின் நிதர்சன் 20 ஆவது நிமிடத்தில் தமது அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார். தொடர்ந்த ஆட்டத்தில் 21 ஆவது நிமிடத்தில் சென்மேரிஸ் அணியின் மேரிசன் தனது அணிக்கான 2ஆவது கோலைப் பதிவு செய்து ஆட்டத்தை முன்னிலைப்படுத்தினார்.

பதிலுக்கு ஆட்டத்தின் 35 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணிக்கு கிடைத்த நேரில் உதையை லாவகமாக கோலாக மாற்றினார் றேஞ்சஸ் அணியின் முன்கள வீரன் சுஜாஸ்கான்.

இதனால் 02:02 என்ற கோல் கணக்கில் ஆட்டம் தொடர்ந்தது.

போட்டி சமநிலையில் தொடர்ந்த வண்ணம் இருக்கையில் றேஞ்சஸ் அணி தமக்கே உரிய ஆட்டத்தை வெளிப்படுத்தத் தொடங்கியது . சிறப்பான பந்துப் பரிமாற்றம் மூலம் அணியின் முன்கள வீரன் ஜானுகன் 40 ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக 3 ஆவது கோலினை பதிவு செய்ய ஆட்டம் முன்னிலையானது. கோல் பெறப்பட்டதும் அணியினதும் ஆட்டம் உச்சம் தொட்டது. முதல் பாதியாட்டம் 03:02 என்ற கோல் கணக்கில் முதல் பாதியாட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியாட்ட ஆரம்பத்தில் கிண்ணத்தை வென்று விட வேண்டும் என்ற நோக்கத்தோடு இரு அணி வீரர்களும் சளைக்காது ஆடத்தொடங்கினர். இதனால் இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளாலும் மேலதிக கோல்களைப் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் 03:02 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று பாசையூர் சென் அன்ரனீஸ் கழகத்தின் 90 ஆவது ஆண்டு வெற்றிக் கிண்ணத்தை கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியினர் சுவீகரித்துக் கொண்டனர்.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக மற்றும் தொடராட்ட நாயகனாக றேஞ்சஸ் அணியின் முன்கள வீரன் சுஜாஸ்கான், இறுதிப் போட்டியின் சிறந்த கோல்காப்பாளர் மற்றும் தொடரின் சிறந்த கோல்காப்பாளராக றேஞ்சஸ் அணியின் ஆர்நிகனும் , தொடரின் அதிக கோல் அடித்த வீரனாக றேஞ்சஸ் அணியின் முன்கள வீரன் ஆர்த்திகனும் தெரிவு செய்யப்பட்டனர். (நி-3-90)

# ஆசிய கால்பந்தாட்ட கிண்ணத் தொடர் தீவிர பயிற்சிகளில் இலங்கை அணி



ஆசிய கால்பந்தாட்ட கூட்டு சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் ஆசிய கால்பந்துக் கூட்டமைப்பின் ஆசிய கிண்ணம் சவூதி அரேபியாவில் 2027 இற்கான கடைசி தகுதிகாண் சுற்றில் டி குழுவில் இடம்பெறும் இலங்கை, தனது இரண்டாவது போட்டியில் சைனீஸ் தாய்ப்பேயை கொழும்பில் எதிர்கொள்ளவுள்ளது.

பாங்கொக் ராஜமங்கலா விளையாட்டரங்கில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற தாய்லாந்துக்கு எதிரான போட்டியில் மிகத் திறமையாக விளையாடி 0 - 1 என்ற இறுக்கமான தோல்வியைத் தழுவிய இலங்கை அணி, சொந்த மண்ணில் சைனீஸ் தாய்ப்பேய் அணியை வெற்றிகொள்ளும் குறிக்கோளுடன் தற்போது பாங்கொக்கில் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இப் போட்டி கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதி பிற்பகல் 3.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டிக்கு முன்னோடியாக சர்வதேச நட்புறவு பயிற்சிப் போட்டி ஒன்றில் புருணையை இலங்கை எதிர்த்தாடும் என இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இப் போட்டி தாய்லாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பன்னாட்டுக் கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு தரவரிசையில் முன்னேறும் குறிக்கோளுடன் இலங்கை அணி தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் இரண்டாவது போட்டிக்கு முழு பலம் கொண்ட அணியை களம் இறக்கவுள்ளதாகவும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர் தெரிவித்தார்.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக ஜஸ்வர் தெரிவான பின்னர் உலக தரவரிசையில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதைக் கால்பந்தாட்ட குடும்பம் நன்கு அறியும். சர்வதேச தரவரிசையில் 207 ஆவது இடத்திலிருந்த இலங்கை கடந்த எட்டு மாதங்களில் 200ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

சைனீஸ் தாய்ப்பேய் உடனான போட்டியில் இலங்கை வெற்றி பெற்றால் தர வரிசையில் மேலும் முன்னேற்றம் அடையக்கூடியதாக இருக்கும்.

இலங்கை அணிக்கு வழமை போல் கோல்காப்பாளர் சுஜான் பெரேரா தலைவராக விளையாடவுள்ளார். (நி-3-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பிரபல நடிகை மாலினி பொன்சேகா காலமானார்



(கொழும்பு)

இலங்கையின் பிரபல நடிகை மாலினி பொன் சேகா தனது 78 ஆவது வயதில் காலமானார்.

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை அவர் காலமானார்.

இலங்கை சினிமாத் துறையில் ஒரு பொக்கிஷமாக மாலினி பொன்சேகா திகழ்ந்தார்.

1947 ஏப்ரல் 30 ஆம் திகதி களனியில் பிறந்த மாலினி செனஹேலதா பொன்சேகா மேடை நாடகம் மூலம் தனது கலைப் பயணத்தை ஆரம்பித்தார்.

5 தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை சினிமாத் துறையில் வேரூன்றியிருந்த அவர் நிதானய, சிறிபாலா மற்றும் ரன் மெணிகா, துஷாரா மற்றும் ஆவா சொயா ஆதரே உள்ளிட்ட நூற்றுக்கணக்கான திரைப்படங்களில் நடித்துள்ளார்.

தென்னிந்திய சினிமாவில் "பைலட் ப்ரேம்நாத்" படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு ஜோடியாக அப்படத்தின் கதா நாயகியாக நடித்துள்ளார்.

2010 முதல் 2015 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும் அவர் செயற்பட்டிருந்தார். (நி-8)

# தடைப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் ஆரம்பித்த ஜப்பான்

(கொழும்பு)

இலங்கையில் பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த முக்கிய அபிவிருத்தித் திட்டங்களை ஜப்பான் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இந்த முடிவு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் நிர்வாகத்திற்கும் அதன் பரந்த ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலுக்கும் ஒரு சக்தி வாய்ந்த ஒப்புதலாகக் கருதப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இலங்கையில் தவறான முகாமைத்துவம், வெளிப்படைத்தன்மை இல்லாமை மற்றும் நிறுவனமயமாக்கப்பட்ட ஊழல்கள் காரணமாக, ஜப்பான் அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து விலகியிருந்தது.

இதன்படி, கொழும்பில் இலகு தொடருந்து போக்குவரத்து அமைப்பு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கம் மற்றும் பல்வேறு நீர், சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு முயற்சிகள் இடை நிறுத்தப்பட்டன.

எனினும், கண்டி நகர நீர் முகாமைத்துவத்திட்டம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் உட்பட ஜப்பானிய அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட 11 தடைப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதாக, ஜப்பானிய தூதர் அறிவித்துள்ளார். (நி-8)

# INVITATION FOR BID 2025
# NORTHERN PROVINCE ROAD PASSENGER TRANSPORT AUTHORITY KILINOCHCHI

The **Chairman, Department Procurement Committee,** on behalf of the General Manager, Road passenger Transport Authority, NP now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.

1. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB) procedure**

   " Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 20Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)".

   "Bidders shall also register themselves with registrar of Public Contracts Srilanka, In terms of the Public contract Act No 03. Of 1987 for the contracts exceed Rs.5 million"

2. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

3. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)

4. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 2025.05.26- 2025.06.06 in between 09:00 hrs and 15:00 hrs.

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **General Manager, Road Passengers Transport Authority, Northern Province, Kilinagar, Kilinochchi (T.P:021 228 5120/021 228 5122)from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2025.05.26 to 2025.06.06 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.

| | Document Issuing/Purchasing Period | | | From 2025 -05-26 to 2025-06-06 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 2025-06-02 | | | | | |
| | Closing and Opening of Bids | | | At 03.15 P.M on 2025-06-06 | | | | | |
| | | | | | | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period | Bid Validity Period | |
| NPRPTA/3/3/5/14/2025-BS-2 | Construction of Public wash rooms and toilets for bus stand at kilinochchi (Balance Work) | 3.40 | 60 Days | C8 or above(Buildings) | 3,500.00 | 35,000.00 | 19.09.2025 | 22.08.2025 | |

6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Road Passenger Transport Authority, Northern Province, Kilinagar, Kilinochchi on or before 03.15 p.m at 2025.06.06.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

7. Pre-Bid Conference will be held at **Northern Provincial Road Passenger Transport Authority, Kilinagar, KilinochchiCommencing at 2.30 P.M on 2025.06.02.**

8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

**General Manager**
**Northern Province Road Passenger Transport Authority.** (C-3038)

# இராசிபலன்

26.05.2025
வைகாசி 12, திங்கட்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 11.39 மணிவரை

பரணி முற்பகல் 7.44 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 ணிவரை

கார்த்திகை விரதம்,
சந்திராஷ்டமம்- சித்திரை

வளவன்

**மேஷம்**: தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கடகம்**: பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பணப்பழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**துலாம்**: சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்**: ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**: உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள், வழி பாட்டில் நம்பிக்கை கூடும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு

**சிம்மம்**: எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தூர தேசத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்**: சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்**: வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்**: எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கன்னி**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காட்டும் நாள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவார்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**தனுசு**: கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், உடல் நலனில் முன்னேற்றமுண்டு.

**மீனம்**: தொழில் முயற்சியில் எதிர்பார்த்த திருப்பங்களைக் காணலாம், பகைவிலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், கௌரவமான நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு நடைபவனி



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் வெள்ளிவிழாவை ஒட்டிய நடைபவனி நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முக்கிய இடங்களில் மரம் நடுகையும் மேற்கொள்ளப்பட்டது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா, பட்டப்பின்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி, முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் கண்ணதாசன் மற்றும் பீடாதிபதிகள் , துறைத்தலை



வர்கள், பேராசிரியர்கள் , அலுவலர்கள் , பழைய மாண வர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-3-33)

# கலந்துரையாடல்


(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா எதிர்வரும் 09.06.2025 திங்கட்கிழமை அன்று நடை பெறவுள்ளது.

இவ்விழா தொடர்பிலான முன்னாயத்த வேலைகளின் முன்னேற்றம் தொடர்பான கள விஜயமும் கலந்துரையாடலும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

கடந்த 30 ஆம் திகதி இடம் பெற்ற முன்னாயத்தக் கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக பொங்கல் விழாவிற்கு வருகைதரும் பக்தர்களிற்கான அடிப்படை வசதிகள் பாதுகாப்பு போன்ற விடயங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் களவிஜயத்தின் போது மாவட்ட உதவி அரசாங்க அதி பர், கரைதுறைப் பற்று பிரதேச உதவிச் செயலாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர், சுகாதார பரிசோதகர்கள் உட்பட உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1954 -- 06 -- 05 |  | 2025 -- 05 -- 23 |

**போல் கிளட்வின் பிறாயன் பொணிபஸ் (பபி)**

**(முன்னாள் கடற்படை உத்தியோகத்தர் (Srilanka Navy)**
**சசிகா லேணர்ஸ் உரிமையாளர்)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.போல் கிளட்வின் பிறாயன் பொணிபஸ் (பபி) அவர்கள் 23.05.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்ரி பொணிபஸ்- றீற்றா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை- றீற்றா தம்பதியினரின் அன்பு மருமகனும், மேசியின் அன்புக் கணவரும், நிலுஜா (லண்டன்), சிமித், எறிக், நிறோமி, நிறேக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகர்(லண்டன்), தெய்வீகன்(ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயம், காலஞ்சென்ற தங்கா, ஜெயராணி, ஜொய்சி, மாலா, ராஜன், நிமால், செராட், நீற்றா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கெனித், கேஷித்(லண்டன்), நிஷ்வின், நித்திக் ஆகியோரின் பசாமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.05.2025 நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

(4383)

யாழ்ப்பாணம். தகவல் குடும்பத்தினர்

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 83/14A, 83/14B, சந்தை வீதி, வட்டாரம் - 11

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்11. சந்தை வீதியிலுள்ள இல: 83/14A. 83/14B ஆகிய ஆதனங்கள் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **வெற்றிவேலு சண்முகரத்தினம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தின் ஒரு பகுதியினை **அருணாசலம் வெற்றிவேலு** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு S.V.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 390/10.07.1948 ஆம் இலக்க உறுதியால் **இளையதம்பி பொன்னுத்துரையும் பெண் நாகம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தின் மற்றைய பகுதியினை **அருணாசலம் வெற்றிவேலுவும் பெண் இராசம்மாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு S.V.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 638/16.11. 1949 ஆம் இலக்க உறுதியால் **ஆறுமுகம் தம்பையாவும் பெண் வியாளுப்பிள்ளையும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**வெற்றிவேலு சண்முகரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9055/15.12.1968ஆம் இலக்க உறுதியால் குறித்த அருணாசலம் வெற்றிவேலுவும் பெண் இராசம்மாவும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனங்களினை உள்ளடக்கிய ஆதனத்தின் ஓர் பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சண்முகரத்தினம் பெண் விஜயராணி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 187/01.05.1976ஆம் இலக்க. உறுதியால் குறித்த **வெற்றிவேலு சண்முகரத்தினம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை வெற்றிவேலு கைம்பெண் இராசம்மாவின் சீவிய உரித்திற்கமைவாக நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **அருணாசலம் வெற்றிவேலு கைம்பெண் இராசம்மா** ஆகியவர் குறித்த 9055ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதி மூலம் மேற்படி ஆதனத்தினை தனது இளைய மகன் குறித்த வெற்றிவேலு சண்முகரத்தினம் ஆகியவருக்கு தானும். தனது கணவரும் இணைந்து தங்களின் அந்தியகாலத்தில் குறித்த **வெற்றிவேலு சண்முகரத்தினம்** தங்களைப் பராமரிப்பார் என்ற நம்பிக்கையில் நன்கொடையாக வழங்கியிருந்ததாகவும். எனினும் குறித்த நம்பிக்கையினை அவர் உதாசீனம் செய்து விட்டதாகவும். அதனால் குறித்த வெற்றிவேலு சண்முகரத்தினத்திற்கு குறித்த 9055ஆம் இலக்க உறுதியால் நன்கொடையாகச் சேர்ந்த பங்கையும். பாகத்தையும் அழிப்பதாகவும். மேலும் தனது அந்திய காலத்தில் தன்னைப் பராமரித்து வரும் தனது மூத்த மகன் **வெற்றிவேலு சுந்தரம்பிள்ளை** ஆகியவருக்கு மேற்படி ஆதனத்தை நன்கொடை வழங்குவதாகவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு ந.ஸ்ரீகாந்தா முகதாவில் 62/01.11.1976ஆம் இலக்கத்தில் உறுதி அழிப்பும். நன்கொடையும் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார். குறித்த **வெற்றிவேலு சுந்தரம்பிள்ளை** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான **சுந்தரம்பிள்ளை மகள் செல்வமலரும், குகராசா கைம்பெண் பாக்கியலட்சுமியும், சின்னராசா கைம்பெண் தனலட்சுமியும், ஸ்ரீஸ்கந்தராசா கைம்பெண் ஜெயலட்சுமியும், சுந்தரம்பிள்ளை மகள் இராசலட்சுமியும்** ஆகியோருக்கு பிதாவழி முதுசமாக வந்தடைந்தது.

**மரியாம்பிள்ளை ஜெயரட்ணம் குகராசா சுரேஸ்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சி.ஆ.இளையதம்பி ஏகநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1480/27.10.2010ஆம் இலக்க உறுதியால் குறித்த **வெற்றிவேலு சண்முகரத்தினமும் பெண் விசயராணியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் சொரியலாய் 1/2 பங்கினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **ஜெயரட்ணம் குகராசா சுரேஸ்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2904/04.09.2023ஆம் இலக்க உறுதியால் குறித்த **சுந்தரம்பிள்ளை மகள் செல்வமலரும், குகராசா கைம்பெண் பாக்கியலட்சுமியும், சின்னராசா கைம்பெண் தனலட்சுமியும், ஸ்ரீஸ்கந்தராசா கைம் பெண் ஜெயலட்சுமியும், சுந்தரம்பிள்ளை மகள் இராசலட்சுமியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் சொரியலாய் 1/2 பங்கினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **குகராசா சுரேஸ்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள். யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **குகராசா சுரேஸ்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (4375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/டிறிபேக் கல்லூரி– சாவகச்சேரி
## அதிபர் உயர்திரு செ. பேரின்பநாதன் (SLPS-I) அவர்களின்
# மணிவிழா சிறப்பு மலர்–26.05.2025




### ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துக்கள்



தென்மராட்சியில் நீண்டகால அதிபர் சேவையில் இருந்து பல பாடசாலைகளின் கல்வி பௌதீக வளர்ச்சியில் அரும் பணியாற்றி யா/டிறிபேக் கல்லூரியை மீண்டும் ஒரு சாதனைப் பாடசாலையாக மிளிர வைத்த 150 வது ஆண்டு விழாவை வரலாறாக்கி எம் மண்ணிற்குப் புகழ் சேர்த்து ஓய்வுபெறும் எமது கல்லூரியின் அதிபர் அவர்களிற்கு மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இனி வரும் ஓய்வு காலங்கள் அவரிற்கு மேலும் சிறப்பாக அமைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும்.

**என்றும் நலமுடன் வளமுடன் வாழ்க.**
**திரு.மகாலிங்கம் ஸ்ரீபாஸ்கரன்**
**செயலாளர்**
**யா/டிறிபேக் கல்லூரி(பழைய மாணவர் சங்கம்).**

### Service Appreciation and Best Wishes



We are pleased to express our sincere appreciation for your dedicated service as President.

Your leadership as Principal from 2018 to 2025 has played a vital role in guiding us along the path of progress.

As you retire, we extend our heartfelt gratitude and wish you a joyful, fulfilling and healthy retirement.Mr. Selladurai Perinpanathan (SLPS I)2018 – 2025

Thank you for your unwavering commitment and contributions to our community.

**With warm regards,**
**Old Students Association – Colombo**

### Dear Principal Mr.S.Perinpanathan



in recognition of your outstanding leadership in education, your inspiring role within the academic comm unity, your selfless service, your remarkable ability to turn the impossible into possible, and your exemplary guidance of the school community, this memento is pre sented with great respect and appreciation to Mr. S.Perinpanathan on behalf of the Drieberg College Chavakacheri, Srilanka Past Pupils Association ( NSW Branch incorporated ) Sydney Australia.

**Regards ,Nithiaseelan, Australia**

## மணிவிழா நாயகனின் வாழ்க்கைத் தடங்கள்

- முழுப்பெயர் :-திரு.செல்லத்துரை பேரின்பநாதன்
- பிறந்த திகதி:- 26.05.1965
- பிறந்த இடம்:- தனங்கிளப்பு
- கல்வி கற்ற பாடசாலை:-
  ஆரம்பக்கல்வி(தரம் 1-5)-தனங்கிளப்பு அ.த.க.பாடசாலை
  தரம்6-11 - சாவகச்சேரி இந்துக்கல்லூரி
  A/L -மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்
- முகவரி :- கைதடி மேற்கு, கைதடி
- கல்வித்தகைமை - க.பொ.த (உ/த)1986
- முதல் நியமனத்திகதி-01.03.1988
  -உதவி இளைஞர் சேவை அதிகாரி
- ஆசிரியர் சேவை :- 01.04.1993 -20.06.1996
- பதில் அதிபர் சேவை:-21.06.1996- 03.08.2000
- அதிபர் சேவை :-04.08.2000 -25.05.2025
- மனைவியின் பெயர்:-திருமதி.பே.கலாதேவி (கைதடி)
- பிள்ளைகள்:-திருமதி.மேருஜா சுவர்ணன்(மருந்தாளர்)
  செல்வி.பே.கபில்ஜா (மாணவி)
- மருமகன்:-திரு.சி.சுவர்ணன்
  (ஆசிரியர் - கிளி/ஐயனார்புரம் அ.த.க பாடசாலை)

**பொதுச்சேவை**

- சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்க முன்னாள் பிராந்திய தலைவர்
- கைதடி ப.நோ.கூ.சங்க முன்னாள் உறுப்பினர்
- கைதடி ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர்
- தென்மராட்சி மத்திஸ்தர் சபை உறுப்பினர்
- தென்மராட்சிக் கல்வி வலய அதிபர் சங்க முன்னாள் பொருளாளர்
- தென்மராட்சிக் கல்வி வலய அதிபர் சங்கத் தலைவர்
- வடமாகாண அதிபர் சங்க உறுப்பினர்
- கைதடி மேற்கு சனசமூக நிலைய முன்னாள் செயலாளர்
- கைதடி கிராம அபிவிருத்தி சங்க முன்னாள் செயலாளர்

**பெற்றுக்கொண்ட விருதுகள்**

- குரு பிரதீபா பிரபா 2014
- ஆவணப்படுத்தலுக்கான சிறப்பு விருது (NIE)
- கௌரவம்- அகில இலங்கை சமாதான நீதவான்

### Dear Principal Mr.S.Perinpanathan



Congratulations on your retire ment! Your hard work and dedication have truly paid off, and it's time for you to enjoy the fruits of your lab our. As you embark on this new chapter of your life, may you find peace, fulfillment and endless opportunities for joy. Your legacy at our Drieberg College will continue to inspire us all and we are so grateful for the wisdom you have shared over the years. Wishing you all the best in your well-deserved retirement. Happy Retirem ent!!! 2025

**Drieberg College Chavakachcheri**
**Alumini Association - Canada**
**Nelson Gunaratnam Hunt, President.**

**வாழ்த்துவோர்**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

**யா/டிறிபேர்க் கல்லூரியின் அதிபர்**
**திரு.செல்லத்துரை பேரின்பநாதன்,**
**மணிவிழாக் காண்கிறார்!**

யாழ்ப்பாண மண்ணின் பசுமைநிறை தென்மராட்சியின் நடுநகர் சாவகச்சேரி: இதன் தெற்காய் அமையுமூர் தனங்களப்பு.

தனங்களப்பூரின் தென்பகுதிக் கடலும் கடல்சார் நிலத்தில் தெங்கும் பனையும் நிறைந்ததாய், நெய்தல் நிலம் அணிசெய்யும். கிழக்கே சிறுபற்றைக் காடுகளும் புல்வெளிகளுமான முல்லை நிலம் முறுவலிக்கும். வடக்கும் மேற்கும் கழனிகளும் கயங்களும் கனமாக்கும் மருதநிலம் மகிழ்வளிக்கும். வரட்சிக் காலங்களிற்கூட மானாவாரிப் போகத்தில், இங்குள்ள வயல்கள் விளைச்சலில் வீழ்வதில்லை. அத்தகை நிலத்தின் விவசாயக் குடும்பமொன்றில், செல்லத்துரை சரஸ்வதி தம்பதியரின் மூன்றாவது பிள்ளையாக, 26.05.1965இல் தோன்றியவர்தான் யா/டிறிபேர்க் கல்லூரியின் அதிபராய் மிளிரும் திரு.செ.பேரின்பநாதன் அவர்கள்.ஆரம்பக் கல்வியைத் தனங்களப்பு அ.த.க.பாடசாலையில் தொடங்கி, ஆறாம் வகுப்பிலிருந்து சாவ.இந்துவில் இடைநிலைக் கல்வியைப் பெற்று. மீசாலை விக்னேஸ்வராவில் உயர்தர மாணவனாய்த் திகழ்ந்தவர் இவர்.01.03.1988இல் -அதாவது தமது இருபத்து மூன்றாம் வயதில், இளைஞர் சேவை உதவி அதிகாரியாய் ஊரை வலம் வந்து உதவிகள் செய்த இவர்.01.04.1993இல் கல்விப் பணியில் ஆசானாய் இணைந்துகொண்டார். முப்பத்தைந் தாம் அகவையில் -04.08.2000தில்- தாம்ஆரம்பக் கல்விபெற்ற 'தனங்களப்பு அ.த.க.'வில்

அதிபர் சேவையை ஆற்றத் தொடங்கினார். அதைத்தொடர்ந்து 06.08.2002இல் மட்டுவில் 'கமலாசினி'யிலும் அதன்பின்னர் 02.11.2012இல் மட்டுவில் தெற்கு 'சரஸ்வதி'யிலும் தொடர்ந்து 23.11.2015இல் கைதடி 'முத்துகுமாரசாமி'யிலும் ஐம்பத்து மூன்றாம் அகவையில் -18.06.2018இல்- நிறைபணி ஆற்றிட 'யா/டிறிபேர்க் கல்லூரி'யில் அதிபராய் இணைந்தும் மேன்மைகள் செய்தார்.டிறிபேர்க்கில் பணிதொடங்கி ஏழாண்டு நிறைகிறது: 26.05.2025இல்-அறுபதாம் அகவையில்- பணி ஓய்வும் வந்துள்ளது.மணிவிழாக் காண்பதின்று அதிபர் பதவிக்கே! அணியணியாய்ச் சேவைகள் இன்னும் பல ஆற்றுகின்ற ஆரோக்கியத்தை ஆண்டவர் அருளியுள்ளார்.

முகம் நிறையும் மலர்வு இதழோரம் புன்முறுவல் கண்களிலே அன்பூற்று கருத்தாளும் உரைநவில்வு கடமைகளில் செயலூக்கம் காரியத்தில் உளப்பற்றுக்கொண்டவராய் இன்னும் சேவை பல ஏற்பதற்குத் தென்மராட்சி காத்துளது. ஊருக்காம் உழைப்புக்கள், சமாதான நீதவானாய்ச் சமன் தேடும் நியாயங்கள், உன்னதமாய் இவரால் உரம்பெற்றுத் தலைநிமிர்ந்து, உத்தமங்கள் இனி மேலும் விளைக்குமென எதிர்பார்ப்போம்!

மனைவி கலாதேவி மகள்கள் மேருஜா, கபில்ஜா் மருகன் சுவர்ணன் என, இனிய குடும்பம் இவர் குடும்பம் எனலாம். குடும்பத்தவர்கள், குதூகலிப்பாய்ச் சொந்தங்கள், குழைந்துள்ள நட்புக்கள், குரல்காட்டும் நிறுவனங்கள் யாவற்றிலும் இவர்சேவை தொடரட்டும் எனநினைப்போம்.

ஓய்வுபெறும் இவரைக் கோவில் நிர்வாகங்கள் வரவேற்று நிற்கின்றன. அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விவசாய நிறுவனங்கள் எதிர்பார்த்துச் சிரிக்கின்றன. பெரும் பணியாகிய அதிபர்பணி ஓய்வுபெறச் சிறுபணிகள் பலதும் சிரமேற்கக் காத்திருக்கும்! வருங்காலம் இன்னும் வளத்தோடும் நலத்தோடும் வண்ணமாய் அமைகவென வாழ்த்தி வழிவிடுவோம்!!

**பாராட்டுக்களுடனும் வாழ்த்துக்களுடனும்,**
**பழையமாணவர்சங்கம்**
**யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.**

# பாரதம்

## நடுக்கடலில் விபத்துக்குள்ளான சரக்கு கப்பல்



(டில்லி)

கொச்சிக்குப் பெற்றோலிய பொருட்களை ஏற்றி வந்த சரக்குக் கப்பல் கடலில் சாய்ந்து விபத்துக்குள்ளானது. விழிஞ்சத்திலிருந்து கொச்சி துறைமுகத்திற்கு MSC ELSA3- கப்பலில் பொருட்கள் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டது.

கப்பல் கொச்சியிலிருந்து தென்மேற்கு சுமார் 38 மைல் தொலைவில் இருந்தபோது கடலில் சாய்ந்தது. அப்போது கப்பலில் இருந்த இரசாயனம் கடலில் கொட்டுப்பட்டது. இதனைத் தொடர்ந்து கப்பல் நிர்வாகம் உதவி கோரி இந்திய அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, மீட்பு பணியில் 2 கப்பல்களும் இராணுவ ஹெலிகொப்டரும் ஈடுபட்டது. இந்த மீட்பு பணியில் கப்பலில் இருந்த 24 பணியாளர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

கப்பலில் இருந்த இரசாயனம் கடலில் கொட்டியதால் அப்பகுதி ஆபத்தான பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கரை ஒதுங்கிய பொருட்களை தொட வேண்டாம் என பொதுமக்களுக்கு கடற்படை அறிவுறுத்தியுள்ளது. (ஙி-8)

## இஸ்ரேலின் கொடூர முகம்!

## 10 பிள்ளைகளில் 9 பேரை ஒரு நாளில் பறி கொடுத்த தாய்

### இதயங்களை ரணமாக்கும் துயரம்



(காசா)

காசாவில் இஸ்ரேல் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் மருத்துவர் ஒருவரின் பத்து பிள்ளைகளில் 9 பிள்ளைகள் கொல்லப்பட்டனர்.

வைத்தியர் அலா அல் நஜார் என்பவரின் வீட்டை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் அவரது கணவரும் பிள்ளையொன்றும் காயமடைந்துள்ளனர் என நாசெர் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மருத்துவரின் உயிர் பிழைத்த 11 வயது மகனிற்கு சத்திரசிகிச்சையை மேற்கொண்ட பிரிட்டிஸ் மருத்துவர் கிரேஸ் குரூம் குழந்தை மருத்துவராக குழந்தைகள் சிறுவர்களிற்கு பல வருடங்களாக மருத்துவ சேவையாற்றிய தாயார் ஒருவர் தனது அனைத்து சொந்தங்களையும் இழக்க நேரிட்டது தாங்க முடியாத கொடூரம் என சர்வதேச செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

வைத்தியரின் கணவர் கடும் காயங்களிற்குள்ளாகியுள்ளார். தலையை குண்டுசிதறல்கள் தாக்கியுள்ளன.

வைத்தியர் அலால அல் நஜாரின் குடும்பத்தினை பொறுத்த வரை இது நினைத்து பார்க்க முடியாத நிலைமை என அவர் குறிப்பிட்டுள்ளார். அவரும் ஒரு மருத்துவர்.

ஹமாசின் மருத்துவ பிரிவினரால் வெளியிடப்பட்ட பிபிசியினால் உறுதி செய்யப்பட்ட வீடியோக்களில் ஹான்யூனிசின் இடிபாடுகளிற்கு இடையிலிருந்து சிறிய எரியுண்ட உடல்கள் மீட்கப்படுவதை காண்பித்துள்ளன.

வைத்தியரின் கணவர் தனது மனைவியை மருத்துவமனையில்விட்டுவிட்டு வீட்டிற்கு வந்த ஓரிரு நிமிடங்களில் அந்த வீடு தாக்குதலிற்குள்ளானது என ஹமாசின் சுகாதார அமைச்சின் இயக்குநர் வைத்தியர் முனீர் அல்போர்ஸ் தெரிவித்துள்ளார். (ஙி)

## உக்ரைன் தலைநகர் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்



(கீவ்)

உக்ரைனின் தலைநகர் கீவ் மீது நேற்று முன்தினம் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த ட்ரோன் தாக்குதலால் அங்கு தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் 8 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மேலும் தாக்குதலுக்காக ரஷ்யாவின் தலைநகர் கீவ் மீது தொடர்ச்சியான ட்ரோன்கள் பறப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஙி-8)

## போர் நிறுத்தத்தில் தாமதம்

## ரஷ்யா மீது ஜி-7 நாடுகள் எச்சரிக்கை

(மொஸ்கோ)

உக்ரைன் மீதான போரில் ரஷ்யா போர் நிறுத்தத்தை ஒப்புக் கொள்ளத் தவறினால், ரஷ்யா மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்க நேரிடும் என்று ஜி-7 நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உக்ரைன் மீதான போரில் ரஷ்யா போர் நிறுத்தத்தை ஒப்புக் கொள்ளத் தவறினால் இந்நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது.

உக்ரைனில் ரஷ்யாவின் தொடர்ச்சியான கொடூரமான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தோல்வியடைந்தால், ரஷ்யாவை எவ்வாறு பின்னுக்குத் தள்ள முடியும் என்பதை குழு ஆராயும் என்று ஜி-7 நாடுகளின் நிதியமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.




அத்தோடு அத்தகைய போர் நிறுத்தம் ஒப்புக் கொள்ளப்படாவிட்டால் தடைகளை மேலும் அதிகரிப்பது போன்ற அழுத்தத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உட்பட அனைத்து சாத்தியமான அம்சங்களையும் நாங்கள் தொடர்ந்து ஆராய்வோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஏழு பேர் குழு என அறியப்படும் ஜி-7 நாடுகளான கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகியோர், போருக்கு நிதியளித்த எந்த நாடுகளும் உக்ரைனின் மறுகட்டமைப்பிலிருந்து பயனடையத் தகுதியற்றவர்களாக இருப்பதை உறுதிசெய்ய இணைந்து செயற்படுவதாக உறுதியளித்தன.

ஆனால், அது எந்த நாடுகள் என்பதை வெளிப்படையாக அறிவிக்க ஜி-7 குழு தயங்கியுள்ளது.

ரஷ்யாவிற்கு ஆதரவாக சீனா ஆயுத ஏற்றுமதி செய்துள்ளதை மேற்கத்தேய நாடுகள் முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தன.

இதனிடையே, ஜி-7 நாடுகளின் நிதியமைச்சர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் உலகளாவிய வர்த்தகத்தை சீர்குலைக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரிகள் பற்றிய குறிப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

ஜி-7 கூட்டத்திற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, ஐரோப்பிய பாராளுமன்றம் ரஷ்ய உர இறக்குமதிக்கான வரிகளை அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய மசோதாவின்படி, ஜூலை முதல் வரிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு மூன்று ஆண்டுகளில் படிப்படியாக 6.5 சதவீதத்திலிருந்து சுமார் 100 சதவீதமாக அதிகரித்து வர்த்தகத்தை நிறுத்தும் என்றே தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ரோகிங்கியா அகதிகள் சென்ற படகுகள் கவிழ்ந்து விபத்து

## 427 பேர் உயிரிழப்பு

(நைப்பியிதோ)

**மியன்மாரில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக அங்கிருந்து ரோகிங்கியா முஸ்லிம்கள் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து வரும் நிலையில் இரு வேறு படகு விபத்துகளில் 427 பேர் உயிரிழந்துள்ளனர்.**



குறிப்பாக, வங்க தேசத்தில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட ரோகிங்கியாக்கள் அதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். மேலும், கடல் வழியாக இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளுக்கும் செல்லும் முயற்சியிலும் ரோகிங்கியாக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், வங்க தேசத்தின் கோக்ஸ் பசார் அகதிகள் முகாமில் வசித்து வந்த ரோகிங்கியாக்களில் 267 பேர் படகு மூலம் இந்தோனேசியாவுக்கு செல்ல முயற்சித்தனர். அப்போது அவர்கள் சென்ற படகு மியன்மார் கடற்பகுதியில் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 201 பேர் உயிரிழந்தனர். அதேவேளை 66 பேர் உயிர் பிழைத்தனர். இந்த சம்பவம் கடந்த 9 ஆம் திகதி நடந்துள்ளது.

அதற்கு அடுத்த நாளான 10 ஆம் திகதி 247 ரோகிங்கியா அகதிகளை ஏற்றிக்கொண்டு சென்ற மற்றொரு படகு கடலில் கவிழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 226 பேர் உயிரிழந்தனர். அதே வேளை 21 பேர் உயிர் பிழைத்தனர். இந்த இரு நாட்களில் நடந்த படகு விபத்துகளில் 427 பேர் உயிரிழந்துள்ளனர். (நி-8)

# டில்லியில் கனமழை

## விமான சேவைகள் பாதிப்பு

(டில்லி)


இந்தியாவின் - டில்லியின் பல்வேறு பகுதியில் கனமழை பெய்ததால் 100 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் புயல் காரணமாக 25 இற்கும் மேற்பட்ட விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

டில்லி விமான நிலையத்தின் சமீபத்திய அறிவிப்பின்படி, நேற்று முன்தினம் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக விமான சேவைகள் நேற்றும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை சமீபத்திய புதுப்பிப்புகளுக்கு பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களுடன் தொடர்ந்து சரிபார்க்குமாறு விமான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், டில்லியில் மே 23 முதல் மே 25 வரை இடியுடன் கூடிய மழை தொடர வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் ஏற்கனவே எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (நி)



# பட்டினியில் வாடும் 'காசா' இரக்கமின்றி கொல்லும் இஸ்ரேல்

## ஐ.நா பொதுச்செயலர் கவலை





(ஜெனீவா)

காசா மக்கள் உணவின்றி வாடி வரும் நிலையில் மறுபுறம் அவர்கள் மீது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது இஸ்ரேல். பட்டினி ஒருபக்கம், தாக்குதல் மறுபக்கம் என தத்தளிக்கும் காசா மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக மாறி வருகிறது.

உலகத்தில் நரகம் எது என்றால் அது காசாதான் என சர்வ நிச்சயமாக சொல்லிவிடலாம். அப்படி ஒரு பரிதாபமான, மோசமான நிலைக்கு அப்பகுதி தள்ளப்பட்டுள்ளது. இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதல்களால் காசாவின் கட்டடங்கள் சரிந்து கிடக்கும் நிலையில் அங்குள்ள மக்களுக்கு செல்லும் உணவுகளும் மருந்துகளும் தடுக்கப்பட்டு, இன்னொரு விதமான தாக்குதலும் தொடுக்கப்பட்டுள்ளது.

செம்பிறை சங்கம், ஐநா போன்ற அமைப்புகள் தரும் சிறிதளவு உணவுக்காக தட்டை ஏந்தி கிலோ மீற்றர் கணக்கில் அலையும் பரிதாப நிலையில் காசா மக்கள் உள்ளனர்.

மிகப்பெரிய இனப்படுகொலையை மௌனமாக வேடிக்கை பார்க்கிறது உலகம்.

பசியாற உணவு தேடி அலையும் நிலையில் இஸ்ரேலிய ஏவுகணைகளும் பாய்ந்து வருவதால் மரண பயத்துடன் நிலவறைகளில் பதுங்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. படுகாயமடைந்துள்ளவர்கள் குவிவதால் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. இடிந்து விட்ட நிலையில் இருக்கும் சில மருத்துவமனைகளும் சிகிச்சைக்கான மருந்துகள் இல்லாத நிலையில் தடுமாறி வருகின்றன.

3 மாதங்களுக்கு பிறகு அண்மையில் சில லொறி உதவிப்பொருட்களை மட்டும் காசாவுக்குள் செல்ல இஸ்ரேல் அனுமதித்துள்ளது. காசா மக்களுக்கு வெள்ளம் போல் உதவி தேவைப்படும் நிலையில் தங்களால் தேக்கரண்டி அளவுக்குத்தான் தர முடிவதாக வேதனை தெரிவித்துள்ளார், ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸ்.

உலகம் தன் கண் முன்னே ஒரு மிகப்பெரிய இனப்படுகொலையை மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பதாக வேதனையும் வெறுப்பும் கொப்பளிக்க ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (நி-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்தின் துணைப் பிரதமர் இலங்கை வருகை



(கொழும்பு)

நியூசிலாந்தின் துணைப் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சருமான வின்செண்ட் பீட்டர்ஸ் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

நியூசிலாந்தின் துணைப் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சருமான வின்செண்ட் பீட்டர்ஸுடன் 4 பேர் அடங்கிய குழுவினரும் வருகை தந்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்கள் இலங்கைக்கான விஜயத்தை நிறைவு செய்து கொண்டு எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் நியூசிலாந்து திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)




## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

## அறிவித்தல்- உயர்திருவிழா-2025

**1.ஆலய உயர் திருவிழாக்காலப்பகுதிக்கான உடைதேங்காய், தற்காலிக கடைகள், ஒளி,ஒலி அமைப்பு**

**2.திருவிழாக் காலப்பகுதி தவிர்ந்த ஏனைய நாட்கள் (ஒருவருட காலப்பகுதிக்கான) உடைதேங்காய் ஏலம்**

ஆலய உயர் திருவிழா 26.06.2025 ஆம் திகதி ஆரம்பமாகி 11.07.2025 ஆம் திகதி நிறைவு பெறவுள்ளது. இக்காலப்பகுதிக்கு தற்காலிக கடைகள், உடை தேங்காய் ஆகியவற்றுக்கான ஏலம் 31.05.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**நிபந்தனை**

01. குளிர்பானக்கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும். சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
02. தேநீர்க்கடைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
03. ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையின் மூன்றில் ஒருபங்கினைச் செலுத்திப்பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். மிகுதித்தொகையினைப் பத்தாவது நாள் திருவிழாவிற்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.

**தற்காலிக ஒளி ஒலி அமைப்பு:**

உயர்திருவிழா காலப்பகுதியான 25.05.2025 ஆம் திகதி தொடக்கம் 11.07.2025 ஆம் திகதிய காலப்பகுதிக்கான தற்காலிக ஒளி ஒலி அமைப்புச்சேவைக்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன.

**நியந்தனை**

- 25.06.2025ஆம் திகதிக்கு முன்னர் பூரணமாக பொருத்தப்படல் வேண்டும்.
- இணைப்பு பொருத்துதல், அகற்றுதல் அனைத்துக்கும் தனித்தனியாக கூலி வழங்கப்படமாட்டாது.
- ஒலி, ஒளி அமைப்புகளின் இணைப்பிற்கான உதிரிப்பாகங்கள் தங்களைச் சாரும்.
- சேவை திருப்திகரமாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி 07.06.2025 பிற்பகல் 2.00 மணிவரை ஆகும்.
- விண்ணப்பப் படிவத்தை ஆலயத்தில் ரூபா 1000.00 செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது ஆலய நிர்வாக பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலை பெட்டியிலோ 07.06.2025 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

**நாளாந்த உடை தேங்காய்களுக்கான ஏலம்**

உயர் திருவிழா காலம் தவிர்ந்த ஏனைய நாட்கள் (ஒரு வருட காலப்பகுதி) உடை தேங்காய் ஏலம் 31.05.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறும். ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையின் மூன்றில் ஒருபங்கினைச் செலுத்திப்பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். மிகுதித்தொகையினைப் இரண்டு தவணை அடிப்படையில் செலுத்தி முடிக்க வேண்டும்.

**அன்னையின் சேவையில்**
**திரு.ந.மோகனரூபன்,**
**செயலாளர்,**
**அறங்காவலர்சபை , ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**


## இன்று ஒரு தகவல் 379

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# ஆசையும் தேவையும்

ஆசைப்படுவதில் தப்பு இல்லை. ஆனால் அந்த ஆசை தேவைக்குத் தகுந்த மாதிரி இருக்க வேண்டும். தேவைக்கு மீறிய ஆசைகள் இருக்கின்றன பாருங்க..ள் அது தேவையில்லை!

இந்தக் கருத்தை வலியுறுத்துகின்ற மாதிரி கதை ஒன்று கிடைத்தது!

தேவேந்திரனுக்கு திடீர் என்று வீடு கட்ட வேண்டும் என்று ஒரு ஆசை வந்தது. வீடு என்றால் நாம் கட்டுகின்ற மாதிரி வீடு இல்லை! தேவேந்திரன் வீடு என்றால் சும்மாவா? ஒரு பிரம்மாண்டமான அரண்மனை கட்ட வேண்டும். அதுமாதிரி இந்த மூன்று லோகத்துலேயும் ஒரு அரண்மனை கிடையாது என்று எல்லோரும் சொல்ல வேண்டும். இது அவனுடைய ஆசை. உடனே தேவதச்சரான விஸ்வ கர்மாவைக் கூப்பிட்டான், உத்தரவு போட்டான்.

விஸ்வகர்மா தன்னுடைய உதவியாளர்களையெல்லாம் கூப்பிட்டு ஒன்றாக சேர்த்துக் கொண்டார். படாத பாடுபட்டு ஒரு பெரிய அரண்மனையைக் கட்டினார். அதைக்கட்டி முடிக்க ஆயிரம் வருடமாகி விட்டது. தேவேந்திரன் வந்து பார்த்தான். அவனுக்கு திருப்தி ஏற்படவில்லை. "என்னுடைய அந்தஸ்துக்கு இது மிகவும் சாதாரணமான கட்டடம்! இதைவிட இன்னும் பெரிதாக் கட்டு! என்றான்.

தேவ தச்சர் திணறிப் போய் விட்டார். அவராலே அதுக்கு மேலே எதுவும் செய்ய முடியவில்லை! என்ன செய்வது என்று யோசித்தார். நேராக நாரதர் காலில் போய் விழுந்தார். நீங்கள் தான் என்னை இந்த பிரச்சனையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்றார்.

நாரதர் யோசித்தார். சரி கவலைப்பட வேண்டாம் என்றார். நேராக இந்திரனிடம் சென்றார்.

இந்திரன் நாரதரைப் பார்த்தவுடனே "வாருங்கள்" என்று கூட்டிக் கொண்டு போய் அரண்மனையைக் காட்டினான்.

"இதுபோன்ற ஒரு அரண்மனையை நீங்கள் வேறு எங்கேயாவது பார்த்திருக்கின்றீர்களா?" என்று மிகவும் பெருமையாக கேட்டான்.

"நான் பார்த்ததில்லை! ஆனால் என்னைவிட வயதிலே மூத்தவர் மகரிஷி லோமேசர்! அவர் ஒரு வேளை பார்த்திருக்கின்றாரோ என்னமோ?" என்றாார்.

உடனே அவரை மனதிலே நினைத்து தியானம் செய்தார். அடுத்த கணம் லோமேசர் அங்கே தோன்றினார்.

இடையிலே ஒரு சின்னத்துண்டு கையிலே ஒரு கமண்டலம்... தலையிலே ஒரு பாய். அவ்வளவுதான் அவரிடம் இருந்தது.

"எதுக்காக தலையிலே இந்தப் பாய்?" என்று கேட்டான் இந்திரன்.

"என்னை மாதிரி அற்ப ஆயுள் உள்ள ஒரு ஜீவன் தனியாக வீடு கட்டிக்கொண்டு திண்டாட வேண்டுமா? இந்த பாய்தான் ஒரு வீடு மாதிரி எனக்கு நிழல் கொடுக்கின்றது!" என்றார் அவர்.

"என்ன உங்களுக்கு அவ்வளவு குறைவான ஆயுளா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் இந்திரன்.

"ஆமாம்! இதோபாரு... என் மார்பிலே ஒரு பொற்காசு அளவுக்கு ரோமம் உதிர்ந்து விட்டது! எப்பொழுது என் உடலிலே உள்ள எல்லா ரோமமும் உதிர்ந்து விடுமோ அப்போது என் ஆயுள் முடியும்!"என்றார் அவர்.

"எப்போது அந்த ரோமங்கள் முழுவதும் உதிரும்!" என்று கேட்டான்.

"ஒரு பிரம்மா மறைந்ததும் ஒரு ரோமம் உதிரும்! என் உடலிலே உள்ள ரோமங்களின் எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவு பிரம்மாக்கள் தோன்றி... அவர்கள் ஆயுள் முடியும் போது... என் உடலிலே உள்ள ரோமங்கள் முழுவதும் உதிரும்!" என்றார்.

"அப்படி என்றால் ஒரு பிரம்மாவுடைய ஆயுள் எவ்வளவு காலம்?" என்று கேட்டான்.

"ஒரு பிரம்மாவுக்கு 100 தேவ வருடம்...ஒவ்வொரு தேவ வருடத்திற்கும் 365 தேவ நாள். ஒவ்வொரு தேவ நாளிலும் உன்னை மாதிரி 14 இந்திரர்கள் தோன்றி மறைவார்கள்!" அப்படிஎன்று மகரிஷி லோமேசர் சொன்னார்.

இதைக் கேட்டதும் இந்திரன் ஆடிப்போய் விட்டான்.

"அவ்வளவு ஆயுள் உள்ள இவரே" அற்ப ஆயுள் என்கின்றார். நான் என்னுடைய ஆயுளைப் பெரிதாக நினைத்துக் கொண்டு பிரம்மாண்டமான அரண்மனை கட்ட வேண்டும் என்று ஆசைப்படுகின்றேனே என்னு நினைத்தான்.

எனக்கு வீடு கட்டியது வரைக்கும் போதும் என்று விட்டான். அதனாலே நாங்கள் எல்லோரும் நம்முடைய தேவைக்குத் தகுந்த மாதிரி ஆசைப்படுவது தான் நியாயம்!

ஆனால் அப்படியா நடந்து கொள்கின்றோம். மனிதன் கடவுளையே ஏமாற்றி காவு வாங்குவதற்கல்லவா ஆசைப்படுகின்றான்! ஒருத்தன் கடவுளை நினைத்து தவம் இருந்தான். கடவுள் நேரிலே வந்தார். தேவலோகத்துலே ரூபாய்க்கு எல்லாம் என்ன மதிப்பு என்று கேட்டான்.

அங்கெயெல்லாம்! ரூபாய் என்பது உங்களுடைய பணத்திலே 1 கோடி ரூபாய்க்கு சமம். அதே மாதிரி எங்களுக்கு ஒரு நாள் என்றபது உங்களுடைய கணக்கிலே 1 கோடி வருடத்துக்குச் சமம்!" என்றார் கடவுள்.

"அப்படி என்றால் எனக்கு நீங்கள் அதிகமா எதுவும் தர வேண்டாம். உங்களுடைய கணக்குப்படி ஒரே ஒரு ரூபாய் கொடுங்கள். அது போதும்!" என்றான். இவன் மிகவும் சாமர்த்தியமாக!

கடவுள் யோசித்தார்: "அது ஒன்றும் கஷ்டமில்லை. ஒரு ரூபாய் கொடுத்து விடுகின்றேன்! ஆனால் இப்பொழுது வரும்போது நான் எடுத்துக் கொண்டு வரவில்லை! உங்களுடைய கணக்குப்படியே ஒரு நாள் பொறுத்துக் கொள். பணத்துடன் வருகின்றேன்!" என்று சொல்லி விட்டு சென்று விட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய சட்டம் தயாரிக்கப்படும் வரை

# பயங்கரவாதத் தடைச்சட்டம்

# பிரயோகிப்பதை இடைநிறுத்த வேண்டும்

## சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன்

**(ஜெனீவா)**

**அரசாங்கம் புதிய பதிலீட்டு சட்டம் தயாரிக்கப்படும் வரை பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்காது எனின், குறைந்தபட்சம் அச்சட்டம் பிரயோகிக்கப்படுவதை இடைநிறுத்தவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.**

பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்கும் அதே வேளை, அதனைப் பதிலீடு செய்யும் வகையில் உருவாக்கப்படும் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் நீதியமைச்சினால் பொதுமக்களிடம் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அம்பிகா சற்குணநாதன்,

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான புதிய சட்ட உருவாக்கம் தொடர்பில் அரசாங்கம் பரிந்துரைகளைக் கோரியிருப்பது நேர்மறையானதொரு விடயமாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு புதிய சட்டத்தை உருவாக்கும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனவும், புதிய சட்டத்தை உருவாக்குவது என்பது பல கட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் நிகழவேண்டிய நீண்ட செயன்முறை என்பதனால், அதற்கு அதிக கால அவகாசம் தேவைப் படும் புதிய சட்டம் தயாரிக்கப்படும் வரை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்காது எனின், குறைந்த பட்சம் அச்சட்டம் பிரயோகிக்கப்படுவதை இடைநிறுத்த வேண்டும்.

அதேபோன்று புதிய சட்டம் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு 14 நாட்கள் கால அவகாசம் போதுமானதன்று. மாறாக குறைந்த பட்சம் ஒருமாத கால அவகாசத்தையேனும் வழங்க வேண்டும் எனவும் அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# சின்னச் சீரகம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name- Cyminum cyminum
Family - Apiaceae

வெப்ப காலத்திற்கு உகந்த சிறந்த மூலிகையும், சமையலறைப் பொருளுமாகும். சின்னச்சீரகத்தில் epigenin, luteolin (எபிடிஜனின், லூடியோலின்) எனும் இரண்டு முக்கிய வேதியற்சத்துக்கள் காணப்படுகின்றன. அதே போல் Anti- Oxidant இரசாயனச் சத்துக்களும் காணப்படுகின்றன.

இவை புற்றுநோய், இருதய நோயின் தாக்கங்களை குறைக்கவல்லது. அத்துடன் உடம்பில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கும் anti inflammato ry (தாபமகற்றி) சத்துக்களும் காணப்படுகின்றன.

நல்ல கொலஸ்ரோலை அதிகமாக்கும். கெட்ட கொலஸ்ரோலைக் குறைக்கும். குடலில் ஏற்படும் அழற்சி போன்றவற்றால் சாப்பிட்ட உடன் வெளிக்கு போகும்(மலம் கழித்தல்) தன்மையையும் குறைக்கக் கூடியது. குடற் புண்ணை ஆற்றும் தன்மையும் சின்ன சீரகத்திற்கு உண்டு. அத்துடன் நரம்பு மண்டலத்தை பலப்படுத்தி ஞாபகசக்தியை அதிகப்படுத்தும் தன்மையும் சீரகத்திற்கு உண்டு.

சீரகத்தை ஒரு நாளைக்கு 300-500 மில்லி கிராம் வரை நாம் சேர்த்துக் கொள்ளலாம். சின்ன சீரகத்தை சுடு நீரில் ஊற வைத்து ஆறிய பின்பு குடிக்க சிறந்த ஆரோக்கியமான பலன்களைக் கொடுக்கும். அல்லது ரசம் வைக்கும் போது கூட சேர்த்துக் கொள்ளலாம். வெந்நீரில்



ஊறவைத்த சீரகத் தண்ணீரை ஆறவிட்டுக் குடிக்கும் போது மலச்சிக்கல், ஜீரணக் கோளாறுகள் சரியாகும். நோய் எதிர்ப்பு மண்டலம் வலுப்படும். இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்த உதவும். உடலில் உள்ள நச்சுத்தன்மையை வெளியேற்றும்.

உடல்எடையைக்குறைக்க விரும்புபவர்கள் தொடர்ந்து சீரகத்தண்ணீரைக் குடித்தால் மாற்றத்தைப் பார்க்கலாம். சீரகத்தில் இரும்புச்சத்து அதிகமாக உள்ளதால் இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கும். சீரகம் ஒரு செரிமான ஊக்க மருந்து என்பதால் வயிற்றிலும், குடலிலும் உள்ள வாயுவை வெளியேற்றும்.

உள் உறுப்புக்களை சீர் செய்வதாலேயே இதற்கு சீரகம் என்ற பெயர் வந்தது. கல்லீரலையும் பலப்படுத்தக் கூடியது. பித்தத்தின் அளவைக் கட்டுப்படுத்தக் கூடியது. இரத்த ஓட்டத்தை சீராக்கக்கூடியது. சீரகத்தில் தைமோக்யூநோன் இருப்பதால் ஆஸ்துமா நோயைக் கட்டுப்படுத்தும். மாதவிடாய் சுழற்சியை சீராக்கும். இவ்வளவு நற்குணங்களும் கிடைக்க வேண்டுமானால் மேற குறிப்பிட்ட அளவில் தினமும் எடுத்துக் கொள்ள வேண்டும். அளவிற்கு அதிகமாக எடுக்கக் கூடாது.

சீரகத்தில் விற்றமின் C, பொட்டாசியம் போன்ற பலசத்துக்கள் இருப்பதால் தினமும் சமையலில் சேர்த்துக் கொள்வது நல்லது. அதுவும் கோடைகாலத்தில் உடலிற்கு தேவையான குளிர்ச்சியை கொடுப்பதில் சீரகத்திற்கு மிக முக்கிய பங்கு உள்ளது. ஒரு லீற்றடர் தண்ணீருக்கு 2 கிராம் அளவு மட்டும் சீரகத்தை சேர்த்து நன்றாக கொதிக்க வைத்து பின்பு பருகவும். இப்படிக் கொதிக்க வைத்த நீரை ஆறவிடாமல் பிளாஸ்கில் ஊற்றி வைத்தும் பருகலாம். அப்படி ஒரு முறை கொதிக்க வைத்த நீரை 12 மணிநேரம் வரை வைத்துப் பருகலாம்.

பொதுவாக கொதிக்க வைத்து பருகும் போது அதிலுள்ள தாது உப்புக்கள் ஆவியாகிவிடும் என்பதால் அது சுவை இல்லாமல் இருக்கும். ஆனால் சீரகத் தண்ணீரை கொதிக்க வைக்கும் போது சீரகத்தில் உள்ள சத்துக்கள் நீருடன் remineraligation ஆன தால் குடிப்பதற்கு சுவையாக இருப்பதுடன் உடலுக்கு ஆரோக்கியத்தை கொடுக்கிறது.

கோடை காலத்தில் அதிகமாக வியர்க்கும் போது அதிகளவில் பொட்டாசியம் வெளியேறும். சீரகத் தண்ணீரைப் பருகுவதன் மூலம் அதனை ஈடுசெய்யலாம். சீரகம் பசி உணர்வைத் தூண்டக்கூடியது. சீரகமானது மனதை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் உணரவும் உதவுகிறது.

மூளையின் ஆற்றலை அதிகரிக்கிறது. உடற் சூட்டால் ஏற்படும் பேதியை கட்டுபடுத்த சீரகம் இரண்டு தேக்ககரண்டி எடுத்து ஒரு வாணலியில் எண்ணெய் விடாமல் வெறுமனே வறுத்து பொரிந்ததும் அடுப்பை அணைத்து அதே சூடான சட்டியில் 2 தேக்கரண்டி அளவு தேனை விடவும். அப்போது சீரகம் பொங்கும். அதே நேரத்தில் 150 மில்லி தண்ணீரை ஊற்றி மீண்டும் அடுப்பைப் பற்ற வைத்து இறக்கி வடித்து இளம் சூட்டில் 1/2 எலுமிச்சை பழச்சாறு விட்டு கலந்து குடிக்கவும். இதன் மூலம் பேதி நிற்கும். தேவைப்பட்டால் 2,3 முறை குடிக்கலாம். ஆனால் அளவிற்கு அதிகமாக பயன்படுத்தினால் நெஞ்செரிவு, ஏப்பம், கல்லீரல் பிரச்சினைகள் போன்றவற்றை ஏற்படுத்தலாம். அளவாக பயன்படுத்தும் போது மேற் கூறிய நன்மைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 782





"தேவி! அவர்கள் ஏழெட்டுப் பேர்! நான் ஒருவன். அவர்கள் ஆயுதபாணிகள். என்னிடம் ஆயுதமே இல்லை. என்னுடைய அருமை வேல் கொள்ளிடத்து வெள்ளத்தில் போய் விட்டது."

"ரொம்ப நல்லது! அந்தப் படுபாதக வேல், சிநேகிதனைப் பின்னாலிருந்து குத்திக் கொல்லும் வேல் ஆற்றோடு போனதே நல்லது.

வந்தியத்தேவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவன் பதில் சொல்ல வாயெடுப்பதற்குள் மணிமேகலை, "உண்மையைக் கூறிவிடும் கொலைக்காரர்களிடம் தப்புவதற்காக ஓடிவந்தீரா? கொலை செய்வதற்காக இங்கு வந்தீரா?" என்று கேட்டாள்.

வந்தியத்தேவன் தீயில் காலை வைத்தவனைப் போல் துடித்து" சிவசிவா! நாராயணா! நான் யாரை கொலை செய்வதற்காக இங்கே வரவேணும்? என் ஆருயிர் சிநேகிதரின் அருமைத் தங்கையையா? எதற்காக?" என்றான்.

"நான் என்ன கண்டேன்? 'அருமை சிநேகிதன்' என்று வாய்கூசாமல் பொய் சொல்கிறீரே? அப்பேர்ப்பட்ட அருமை சிநேகிதனின் பின்னாலிருந்து முதுகிலே குத்திக் கொல்லுவதற்கு நீர் முயலவில்லையா? அது எதற்காகவோ அதே காரணத்துக்காக இங்கே யாரையேனும் கொலை செய்வதற்கு நீர் வந்திருக்கலாம்."

"கடவுளே! இது என்ன வீண் பழி? நானா கந்தமாறனின் முதுகில் குத்தினேன்? அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதற்கு முன்னால் என் கையை வெட்டிக் கொண்டிருப்பேனே? இளவரசி! இத்தகைய படுபாதகமான பொய்யைத் தங்களிடம் யார் கூறினார்கள்?"

"என் அண்ணனே கூறினான் வேறு யாராவது கூறியிருந்தால் நான் நம்பியே இருக்க மாட்டேன்."

"கந்தமாறனா இப்படிக் கூறினான்? அப்படியானால் நான் உண்மையில் துர்ப்பாக்கியசாலிதான்! யாரோ அவனை முதுகிலே குத்தித் தஞ்சாவூர் மதில் சுவருக்கு அருகில் போட்டிருந்தார்கள். மூர்ச்சையாகிக் கிடந்த அவனை நான் தூக்கிக் கொண்டு போய்ச் சேந்தன் அமுதன் குடிசையில் சேர்த்துக் காப்பாற்றினேன். அதற்கு எனக்குக் கிடைத்த வெகுமதியா இது? இளவரசி! எதற்காக அவனை நான் கொல்ல முயன்றேனாம்? ஏதாவது காரணம் சொன்னானா?"

"சொன்னான், சொன்னான்! நீர் என் அழகைப் பழித்து, அவலட்சணம் பிடித்தவள் என்று இகழ்ந்தீராம். தஞ்சாவூர்ப் பெண்கள் என்னைவிட அழகிகள் என்று சொன்னீராம். அதனால் கந்தமாறன் கோபங்கொண்டு உம்மை நன்றாய்ப் புடைத்தானாம். நேருக்கு நேர் சண்டையிடக் கையினாலாகாமல் பின்னாலிருந்து குத்தி விட்டீராம்! இதெல்லாம் உண்மையா, இல்லையா?"


"பொய்! பொய்! பயங்கரமான பொய் தங்களை அவலட்சணம் என்று சொல்வதற்கு முன்னால், என் நாக்கையே துண்டித்துக் கொண்டிருப்பேனே! கந்தமாறன் அல்லவா அவனுடைய சகோதரியை நான் மறந்து விடவேண்டும் என்று வற்புறுத்தினான்?" எதற்காக?" "இராஜ்யம் ஆளும் பேரரசர்கள் தங்களை மணந்து கொள்ளக் காத்திருப்பதால் தங்களை நான் மறந்துவிட வேண்டுமென்று வற்புறுத்தினான்."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வல்லவனுக்கு வல்லவன்



கவலையுடன் நடந்து வந்ததை பார்த்தது. ஏன் உன் குகைக்கு போகவில்லையா? என்று கேட்டது.

ஓநாய் கவலையுடன் தன்னுடைய குகையில் புலி ஒன்று தங்கியிருப்பதை சொன்னது. கரடியாருக்கு ஆத்திரம் வந்தது. அது எப்படி உன்னுடைய குகையில் அது வந்து தங்கலாம்? போய் கேட்கலாம் வா என்று ஓநாயை மட்டும் அழைத்துக்கொண்டு அதனது குகைக்குள் வந்தது.

உறங்கிக்கொண்டிருந்த புலியாரை மெல்ல கூப்பிட்டது. கண்ணை திறந்து பார்த்த புலியார் எதிரில் கரடியும், ஓநாயும் நிற்பதைப் பார்த்தது.

என்ன? குரலில் அதிகாரம் ஓங்கியிருந்தது. கரடியார் மெல்ல கொஞ்சம் நடுக்கத்துடனும், ஐயா, இந்த இடம் நமது ஓநாயிற்குச் சொந்தமானது. நீர் இப்படித் திடீரென்று வந்து அதனது இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டால் அது என்ன செய்யும்?

உடனே புலியார் ஓஹோ..ஓஹோ என்று சிரித்து . ஏளனமாய் என்ன கரடியாரே உமக்கு உடம்பு எப்படியிருக்கிறது? இந்த காடு அனைவருக்கும் பொதுவானது.

அதே நேரத்தில் இந்தக் குகை இப்பொழுது எனக்கு சொந்தம் இதனை கேட்க உனக்கு என்ன தைரியம்?

ஐயா கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள், இந்தக் காடு அனைவருக்கும் சொந்தம்தான். அதே நேரத்தில் இந்த காட்டில் இத்தனை வருடங்களாக வசித்து வரும் இந்த ஓநாய் இந்தக் குகையிலேயே நீண்டகாலமாக வசித்து வருகிறது. அதனுடைய பெற்றோர் காலத்திலிருந்து இங்குதான் வசித்து வருகிறது. உமக்கு வேண்டுமானால் நான் ஒரு குகையை காட்டுகிறேன், அங்கு வந்து தங்கிக்கொள்ளும் என்று மரியாதையாய் சொன்னது.

அடேய் கரடியாரே இன்னும் ஒரு நிமிடம் இங்கு நின்றிருந்தாயானால் உன்னை அடித்து கொன்று விடுவேன், மரியாதையாய் இந்த இடத்தை விட்டுச் சென்று விடு என்றது.

சொல்லிவிட்டு தன் தூக்கத்தை மீண்டும் தொடர்ந்தது புலி.

கரடிக்கு அதைக் கேட்டவுடன் கோபம் வந்தாலும், புலியாரின் வலிமையை நினைத்து தன்னை அடக்கிக் கொண்டது. இவனுக்கு உடம்பால் பதில் சொல்வதை விட புத்தியால் பதில் சொல்வதுதான் சரி முடிவு செய்த கரடியார், ஓநாயை அழைத்துக்கொண்டு தன்னுடைய குகைக்குள் கூட்டிச்சென்று இரண்டு மூன்று நாட்கள் இங்கு தங்கிக்கொள், அதற்குள் இந்த புலியை அங்கிருந்து விரட்டி விடுகிறேன் என்று சொல்லி விட்டுச் சென்றது.

ஓநாயையும், அதன் குட்டியையும் தன்னுடைய குகைக்குள் விட்டு விட்டு கரடி மட்டும் வெளியே வந்தது. அதற்குள் காடு நன்றாக இருட்டி விட்டது. கரடியார் மெல்ல அடர்ந்த காட்டுக்குள் நுழைந்து சத்தமில்லாமல் ஒரு மரத்தின் மீது ஏறியது.

அந்த மரத்தில் ஒரு கிளையில் தேன் கூடு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. கரடியார் அந்த கிளையை மட்டும் ஒடித்து கொண்டு மரத்தை விட்டு இறங்கி புலி தங்கியிருந்த ஓநாயின் குகைக்கு நடந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை நற்குணம் தனக்குத்தானே உண்மையாக இருப்பது. – சத்குரு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச காணிகளை வழங்கும் ஏற்பாடு உண்டா?

பூதான இயக்கம் என்ற பெயரில் காணியற்றவர்களுக்கு காணி வழங்குகின்ற இயக்கத்தை வினோபாஜி எனும் இந்திய தேசத்துப் பெரியவர் ஆரம்பித்தார்.

இவ்வுலகில் பிறந்தவர்களுக்கு ஒரு சிறு நிலத்துண்டேனும் சொந்தமாக இல்லை என்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். எனவேதான் காணி இல்லாதவர்களுக்கு காணிகளை வழங்குகின்ற ஒரு பேரியக்கத்தை வினோபாஜி ஆரம்பித்தார்.

இப்போது அந்த இயக்கத்தின் இயங்கு நிலை என்னவென்று தெரியவில்லையாயினும் நிலச்சுவாந்தர்கள் இப்போதும் காணி இல்லாதவர்களுக்குக் காணிகளை வழங்குகின்ற பூதானத்தைச் செய்து கொண்டுதான் இருக்கின்றனர்.

உண்மை. அண்மையில் கேரளாவில் உள்ள வயநாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மண்சரிவு காரணமாக எத்தனையோ குடும்பங்கள் நிர்க்கதியாகின.

இந்நிலையில் கேரள நாட்டைச் சேர்ந்த ஒரு செல்வந்தர் தனக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கர் நிலத்தை வயநாட்டு மக்களுக்குத் தானம் செய்திருந்தார். இஃது ஒரு சிறுகுறிப்பு மட்டுமே.

நாம் இங்கு கூறவருவது எங்கள் தமிழர் தாயகத்தில் நிலமற்ற ஏழை மக்களுக்கு அரச காணிகளை வழங்குகின்ற வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்தாக வேண்டும்.

உண்மையில் சொந்தமாகக் காணி இல்லை என்பதால், அரச வீட்டுத் திட்டத்தை இழந்தவர்கள் பலர்.

அன்று ஒரு சிறு காணித்துண்டு சொந்தமாக இருந்திருந்தால், குறித்த ஏழைக் குடும்பங்கள் சொந்த வீட்டில் வாழ்ந்திருக்க முடியும். அவர்களின் ஏழைப் பிள்ளைகள் கல் வீட்டில் இருந்து கற்றிருக்க முடியும்.

என்ன செய்வது சொந்த நிலம் இல்லை என்றால், அரசாங்க வீட்டுத் திட்டத்தை வழங்க முடியாது என்ற இறுக்கமான போக்குக் காரணமாக இன்றுவரை சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு இலவச வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை.

ஆக, இப்போது அந்தக் குடும்பங்கள் சொந்தக் காணியும் இல்லை. சொந்த வீடும் இல்லை என்ற கந்தறு நிலையில் வாழ்கின்ற பரிதாபத்தில் உள்ளனர்.

இங்குதான் ஏழை மக்களுக்கு – காணியற்றவர்களுக்கு அரச காணிகளை வழங்குகின்ற நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும்.

இதுவிடயத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் ஏழை மக்கள் மீது இரக்கம் கொண்டு செயற்படுமாக இருந்தால், அரச காணிகளை அவர்களுக்கு வழங்கி அந்த மக்களுக்கு உதவ முடியும்.

இதற்கும் மேலாக, எத்தனையோ நிலச் சொந்தக்காரர்கள் தங்களின் நிலங்களை அடையாளப்படுத்தாமல் விட்டுவிட்டு வெளிநாடுகளில் உள்ளனர். இத்தகையவர்கள் தாமாக முன்வந்து தங்களின் காணிகளை நிலமற்றவர்களுக்குப் பிரித்து வழங்குவார்களாயின், அதைவிட்ட புண்ணிய கருமம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஆகவே, சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் தத்தம் பிரதேசத்தில் உரிமை கோரப்படாமல் விடப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களை இனங்கண்டு, அவர்களின் சம்மதத்துடன் அந்தக் காணிகளை நிலமற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும்போது அந்தக் குடும்பங்களும் மகிழ்வாக வாழ முடியும்.

# நிறைவேற்று அதிகார முறைமையை நீக்க தக்கதொரு தருணம் உதயமாகியுள்ளது

## நிறைவேற்று அதிகாரத்தை அடியோடு ஒழிப்பேன் என்ற அநுரவின் வாக்கை அநுரவுக்கு நினைவூட்டுகிறார் பேராசிரியர் ஆசு மாரசிங்க

நிறைவேற்று அதிகார முறைமையை அடியோடு ஒழிப்பேன் என தேர்தலின் போது ஜனாதிபதி அநுர அளித்த வாக்குறுதியை நினைவூட்டிய பேராசிரியர் ஆசு மாரசிங்க அதனை அழிப்பதற்கான உன்னத தருணம் இதுவே எனச் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அநுரவே இறுதி நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்று எடுத்தியம்பிய பேராசிரியர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குரிய தக்க சந்தர்ப்பம் தற்போது உதயமாகியுள்ளது. அதனைச் சரிவரப் பயன்படுத்தி வழங்கிய உறுதிமொழியை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவேன் என உறுதியளித்தே சந்திரிக்கா இரு தடவைகள் ஆட்சிக்கு வந்தார். மஹிந்தவும் அந்த உறுதிமொழியையே வழங்கினார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு மேற்படி தரப்புகளுக்கு ஜே.வி.பியினர் ஆதரவு வழங்கினர். ஆயினும் அது நிறைவேறவில்லை

இன்று தேசிய மக்கள் சக்தியினரிடம் பாராளுமன்றத்தில் 159 ஆசனங்கள் உள்ளன. அப்பெரும்பான்மையை சரிவரப் பயன்படுத்தி அரசியலமைப்பு மாற்றத்தைச் செய்ய வேண்டும்.

ஆனால் நிறைவேற்று அதிகார முறைமை நீக்கம் தொடர்பில் தற்போது கருத்தாடல் இல்லை. எனவே கருத்தாட்லை நாம் ஆரம்பிக்க வேண்டும். அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை மறந்து செயற்படக்கூடாது என்றார். (ம-4,7)

### உள்ளூராட்சித் தேர்தலில் பின்னடைவு கண்ட

# ஆளும் தரப்பு மாகாணசபைத் தேர்தலை பின்னடிப்புச் செய்யவே முயலும்

## முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆரூடம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களில் அடைந்த பின்னடைவையடுத்து வெகு விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் விரும்பாது எனவும் அதனைத் தொடர்ந்து இழுத்தடிப்புச்செய்து காலதாமதப்படுத்துவதற்கே முற்படும் எனவும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் கருத்துவெளியிட்ட அவர் 2018 ஆம் ஆண்டிலிருந்து மாகாணசபைகளுக்கான தேர்தல் தொடர்ச்சியாகப் பிற்போடப்பட்டுவரும் நிலையில் இனியும் தாமதமின்றி அத்தேர்தலை நடத்த வேண்டும் என்றே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

இருப்பினும் கடந்த பாராளுமன்றத்தேர்தலுடன் ஒப்பிடுகையில் அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெரும் பின்னடைவைச் சந்தித்திருப்பதனால் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கே அரசாங்கம் முற்படும் எனக் கருதுகின்றோம்.

மாகாணசபைத்தேர்தலை நடாத்தி அதனூடாக சில சபைகள் ஏனைய கட்சிகள் வசம் செல்வதை தே.ம.சக்தி அரசாங்கம் ஒருபோதும் விரும்பாது.

ஆகவே இவ்வருடமும் மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் காலந்தாழ்த்துவதற்கே அரசாங்கம் முற்படும் என்றார். (ம-4,7)

### கோட்டையம்பதி சிவசுப்பிரமணியருக்கு

# கார்த்திகையில் கொடியேறி வைகாசி விசாகத்தில் தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கோட்டையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவமானது இன்று திங்கட்கிழமை கார்த்திகை நன்னாளில் காலை 10.00 மணிக்கு துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் பக்திபூர்வமாக இடம்பெறும்இவ்வாலயமஹோற்சவந்தனில் வைகாசி மாதம் 24 ஆம் நாள் சனிக்கிழமை எம்பெருமானின் சப்பைரத உற்சவமும் மறுநாள் இரதோற்சவமும் வைகாசி விசாக நன்னாளில் தீர்த்தோற்சவமும் நடைபெற்று மாலை துவஜா அவரோகணமும் சண்டேஸ்வரர் உற்சவமும் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது. (ம-4,7)

### யாழ்.பல்கலையில் நாளை

# உயர்கல்வி வழிகாட்டல் விஷேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் அலகும் விஞ்ஞானபீட தொழில் வழிகாட்டல் அலகும் இணைந்து நடாத்தும் உயர்தரத்திற்குப் பின்னரான உயர்கல்வி வழிகாட்டல் என்னும் தொனிப்பொருளினாலான செயலமர்வு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை (27) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு மற்றும் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. [illegible]

மாணவர்களுக்கான இக் கருத்துப் பகிர்வில் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை சரியான முறையில் நிரப்புதல், பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் நுட்பங்கள் மற்றும் பல்கலைக்கழக வாய்ப்பினை தவறவிட்ட மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல்கள் தொடர்பில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களினால் சிறப்பான முறையில் வழிகாட்டல்[illegible]ள்ளன. (ம-4,7)

# பொலிஸ் நிலையங்கள் தோறும் கண்காணிப்புக் கமராக்கள்

### பொருத்த வலியுறுத்துகிறது மனிதவுரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசேடமாக பொலிஸ் நிலையங்களில் உள்ள சிறைக் கூண்டுகளில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட வேண்டும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டிள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்கள் பொலிஸ் நிலையங்களின் சிறைக்கூண்டுகளில் உயிரிழக்கும் சம்பவங்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகின்ற நிலையை மேற்கோள் காட்டி அதன் உண்மைத் தன்மையை கண்டறியவும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்காகவும் இந்நடவடிக்கை எடுக்கப்படல் அவசியம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களில் இதுவரை 8 பேர் உயிரிழப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இது வரையான காலப்பகுதியில் வீதி விபத்துக்கள் காரணமாக எட்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் 19 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து தொடர்பான இந்த மாதத்திற்கான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற போதே குறித்த தகவல்கள் வெளியிடப் பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதிப் போக்குவரத்துகளில் அதிகரித்த வேகம், மதுபோதையில் வாகனம் செலுத்துதல் வீதிகளில் கால்நடைகளின் நடமாட்டம் என்பவற்றினால் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

இந் நிலையில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்துகளில் எட்டு பேர் உயிரிழந் துள்ளதுடன் 19 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற வீதி விபத்துகளில் 28 பேர் உயிரிழந்துள்ளதுடன் 58 பேர் வரையில் படுகாய மடைந்துள்ளனர். மது போதை யில் வாகனம் செலுத்துதல், அளவுக்கு அதிகமாக வேகமாக வாகனங்களை செலுத்துதல், இரவு வேளைகளில் கால்நடைகள் நடமாட்டம் என்பன காரணமாகவே அதிகளமான விபத்துக்கள் இடம்பெற்றன.

எதிர்காலத்தில் விபத்துக்களைத் தடுப்பது தொடர்பிலும் குறித்த கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-315)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 350 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 210 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 300 | 300 | 160 | 300 |
| தக்காளி | 800 | 750 | 800 | 550 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 450 | 550 | 500 | 300 | 500 |
| கரட் | 900 | 900 | 800 | 800 | 900 |
| பூசணி | 150 | 180 | 180 | 170 | 200 |
| புடோல் | 250 | 200 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 350 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 150 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 700 | 800 | 550 | 800 |
| வெண்டக்காய் | 250 | 180 | 150 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 200 | 200 | 400 |
| பயற்றங்காய் | 500 | 500 | 200 | 450 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 700 | 450 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 1000 | 800 | 1500 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 350 | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 100-150 | 150 | 100 | 200 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 220 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 800 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 80 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 70 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | -- |


மணிவிழா நாயகியை
மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



திருமதி. கலாவேணி
பாலகிருஷ்ணர் (SLTS-I)
(ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர்)
(யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை)

கல்விப்பணியாற்றி
மணிவிழாக்காணும்
ஆசிரியரை மனதார
வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்-
ஒன்றாகப் பணியாற்றிய உறவுகள்

திருமதி.சு.மீனலோஜினி (ஓய்வுநிலை அதிபர்)
திருமதி.த.தமயந்தி (ஓய்வு நிலை பிரதி அதிபர்)
திருமதி.ஜெ.மங்களாம்பிகை
திரு.மு.முருகவேள்
திரு.தி.சாந்தகுமார்
திருமதி.தி.சந்திரிகா
திருமதி.சி.வாசுகி
திருமதி.இ.சிவமாலா
திருமதி.அ.விஜயகலா
திருமதி.பா.திருமகள்
திருமதி.சி.பிரபா
திருமதி.சா.டனியலா
திருமதி.ந.ஜனார்த்தனி
திருமதி.வி.கமலினி
திருமதி.வ.ரேணுகா
திருமதி.அ.தர்மகுமாரி
திருமதி.ஜெ.பிரவீனா
(4382)


# நல்லூர் அலங்காரா புனிதம் கெடுக்கும் அசைவ உணவகம் கந்தன் அருளால் சைவ உணவகமாகியது இன்று-திங்கள் 26.05.2025 அமாவாசை-கார்த்திகை-பிரார்த்திப்போம்- ஓம் முருகா

**கொல்லாமல், கொன்றதைத் தின்னாமல்,
குத்திரங் கோள் களவு
கல்லாமல், கைதவ ரோடு இணங் காமல்
கனவி லும்பொய்
சொல்லாமல், சொற்களைக் கேளாமல்,
தோகையர் மாயையிலே
செல்லாமல், செல்வந் தருவாய் சிதம்பர
தேசிகனே!**

இது சித்தர் பாட்டு. பட்டினத்தார் திருத்தில்லையில் பாடியது. ஊன்-உண்ணாமை-திருமந்திரம்-199.

**“பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
“செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே”**

இறைச்சி உணவு உயிருக்குத் துன்பம் தருவதுடன் உடலுக்குத் தீமை விளைவிப்பது. மாமிசம் உண்ணும் கீழ் மக்களை எமது தூதர்கள் கறையானைப் போல் பறித்து( இன்று கான்சர்நோய்) அரித்து நரக நெருப்பில், நரகத்தில் வைப்பர்.

197 ஆவது திருமந்திரத்தில் இன்னொரு உயிரைக் கொல்லாமையாகிய சிறந்த மலர், இறைவனுக்கு மாலையாகும் பூசைக்கேற்ற தீபமாகும்.

பட்டினத்தார்:- திருக்கச்சி ஏகாம்பரநாதரைத் துதித்துப் பாடிய மாலை.

**கொன்றேன் அனேகம் உயிரை எல்லாம் பின்பு
கொன்றுகொன்று தின்றேன் அதன்றியுந்
தீங்கு செய்தேன்- அது தீரஎன்றே
நின்றேன் நின் சன்னதிக்கே அதனால்-
குற்றம் நீ பொறுப்பாய்
என்றே உனை நம்பினேன் இறைவா!
கச்சி ஏகம்பனே!**

புனித நல்லூர் சூழலில் அசைவ உணவகம் இயங்கியதும் பின்னர் பத்து நாட்களில் சைவ உணவகமாக மாறியது நல்லூர் முருகன் அருள் ஆகும். “அவன் அருளாள் அவன் தாள் பணிந்து” என்ற மாணிக்க வாசகர் வாக்குக்கு அமைய முதல் ஓர் தபால் எழுதியும், மறுபடி அடியார்களின் கையொப்பம் ஆரம்பமாகும் 17.05.2025 அன்று வெள்ளி 6 மணியளவில் ஐந்து அடியார்கள் கையொப்பம் வைத்த பின்னர் ஓர் **அடியார் நெல்லியிலையுடன் நெற்றியில் திருநிறு கழுத்தில் உருத்திராச்சத்துடனும், அரையில் ஓர் ஆண்டித் துண்டுடனும் தானாக கையொப்பம் வைத்தும் ,** தனது ஆதரவு எப்பவும் இருக்கும் எனவும் ஆறுமுக வாசலில் எரியும் கற்பூரம் அந்தக் கடைக்கு உரிய மாற்றம் தரும்

எங்களுக்கு வெற்றியும் தரும் எனவும் சொல்லிச் சென்றார். அதன்பின் கடை சைவமாக மாற்றியமைத்த பின் முருகன் மாற்றிவிட்டார் என வெள்ளிக்கிழமை சாயந்திரம் வந்து **முருகனையும் எம்மையும் வாழ்த்திச் சென்றார்.**

இது அற்புதம் என அடியார்கள் வியந்து முருகனை வாழ்த்தி வணங்கினர்.

இன்று 26.05.2025 திங்களும், வைகாசியும், அமாவாசையும், கார்த்திகை நட்சத்திரமும் ஒன்று சேர்ந்த தினத்தில் அமாவாசை விரதத்தையும் கடைப்பிடித்தும், கார்த்திகை நட்சத்திரமான முருகன் வழிபாட்டில் ஈடுபட்டு **முருகன் திருப்புகழ், கந்தர் அனுபூதி, திருவாசகமும் திருமுறை ஓதியும் ஆலய சுற்றாடலின் புனிதத்யையும் , பேணிப்பாது காக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்.**

இது திருவருள் விடயத்தில் சிறப்பித்து பணிசெய்த அடியார்களுக்கு அரச, அதிகாரிகளுக்கும், மாநகர சபை ஆணையாளர்க்கும், நன்றியும் சூரிய , சந்திர காலம் பூராகவும் என்றும் புனிதப் பிரதோசமாக இருக்கும் எல்லோரும் இனிது ஒன்றி நல்லூரா, எம் இதயத்தில் இருக்கும் அலங்காரா எனத் திருமுறைகள் ஓதி பணிவோம்.

**நமசிவாய அஞ்செழுத்தும் நல்குமேல் நிலைகளும்
நமசிவாய அஞ்சில் அஞ்சும் புராணமான மாயையும்
நமசிவாய அஞ்செழுத்து நம்முளே இருக்கவே
நமசிவாய உண்மையை நன்னுரைசெய் நாதனே.**



**க.கு.க சிவபாலன், போசகர்,
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் மோதியதில்...

பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பொன்னழகு அனுசன்ராஜ் (வயது-28) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

புகையிரதக் கடவையை மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்டபோது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த குளிரூட்டப்பட்ட ரயில் மோதியதில் இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4,100,315,316)

## மோ.சைக்கிள்...

இதில் கிளிநொச்சி ஜெயந்தி நகரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சோமு கஜேந்திரமூர்த்தி (வயது-37) என்பவரே உயிரிழந்தவராவார்.

பரந்தன் விவசாய திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றியவரே இவ்வாறு விபத்தில் மரணமடைந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ம-7,4,100,315,316)

## கரவெட்டியில்...

ஆண் குழந்தை ஒன்று நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளது.

இதில் கரவெட்டி துன்னாலை மேற்கைச் சேர்ந்த எட்வேட் தனுசன் செரின் என்ற இரண்டு மாத ஆண் குழந்தையே மரணமடைந்துள்ளது.

குறித்த குழந்தை கடந்த வியாழக்கிழமை (22) சளி மற்றும் இருமல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் நேற்று முன்தினம் சனிக்கிழமை (24) யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்த நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,4,60)

## வடக்கில்...

களுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி வரை கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் பிற்பகலில் அல்லது இரவு வேளைகளில் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இந்த மழை மேற்காவுகைச் செயற்பாட்டினால் உருவாகும் மழை என்பதனால் இடி மின்னலோடு இணைந்ததாகவே இந்த மழை கிடைக்கும்.

அதேவேளை எதிர்வரும் 27ஆம் திகதி அன்று வங்காள விரிகுடாவில் பங்களாதேஷுக்குத் தெற்காகக் காற்றழுத்தத் தாழ்வு நிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் எந்த ஒரு பகுதிக்கும் எத்தகைய பாதிப்பும் கிடையாது.

ஆனாலும் இந்த நாட்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,4)

## பாரிய...

அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடையாது என அநுர அரசிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நாமல் எம்.பியின் இந்தக் கருத்துத் தொடர்பில் நேற்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சிக்கு முடிவு கட்டவே நாட்டு மக்கள் வீதியில் இறங்கிப் போராடினார்கள். இறுதியில் ராஜபக்ஷக்களை மக்கள் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் தேசிய மக்கள் சக்தி கட்சியை மக்கள் ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகின்றோம். விரைவில் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம். ராஜபக்ஷக்கள் எமக்கு அறிவுரை கூறத் தேவையில்லை.

ராஜபக்ஷக்கள் இழைத்த குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும். நாம் அதில் தலையிடமாட்டோம் என்று தெரிவித்தார். (ம-7,4)

## தமிழ் அரசியல்...

தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழ் ராஜபக்ஷர்கள் தோற்றம் பெறுவார்கள் என்று ஒரு போதும் நினைக்கவில்லை.

வட மாகாண மக்களின் ஆதரவு எமக்குள்ளது. இது ஆரம்பத்தின் முதல் வெற்றியாகும். வடக்கில் பலமான அரசியலுக்கான அத்திபாரமிட்டுள்ளோம்.

நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திகளை முன்னிலைப்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கில் செயற்படுவோம். சுயவிருப்பத்தின் அடிப்படையில் வெகுவிரைவில் அமைச்சின் விடயதானங்கள் மறுசீரமைக்கப்படும்.

புதிய தரப்பினர்கள் அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். மக்கள் எதிர்பார்த்த அரச நிர்வாகக் கட்டமைப்பை வினைத்திறனாக்குவோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7,4)

## முரு...

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை ஆலயத் தீர்த்தக் கடற்கரையில் கடற்படை முகாமுக்கு அருகே உள்ள குன்றிலேயே குறித்த புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு பௌத்த கொடியை பறக்கவிடப்பட்டுள்ளமையும் கடுமையான எதிர்ப்பலையை ஏற்படுத்தியுள்ளது.

உகந்தைமலையில் நாங்கள் முருகன் சிலையொன்றை நிறுவ முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதே சூழலில் இந்தப் புத்தர் சிலை எவ்வாறு வைக்கப்பட்டது? என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கதிர்காமம் போல் உகந்தை மலையையும் மாற்றுவதற்குத் திட்டமிட்ட சதி நடக்கிறதா? என்றும் இந்து மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ம-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 5840
K 5 2 6 4 9 6
அத சம்பத
K 6 4 9 6
சீட்டிழுப்பு இலக்கம் 415
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1870
W 05 32 43 47 W
Double Chance 58056

மெகா பவர்
திகதி 25/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2188
K 16 10 18 38 55

ஜய
திகதி 2025.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 0108
Z 1 8 0 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4082
சீட்டிழுப்பு திகதி | 25.05.2025
I 04 43 69 72
I
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 1149
தனுசு 10 38 46 49 தனுசு
29159 44

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.05.2025 வெற்றி வாரம் 548
F 9 5 1 8 4 1
67849
ரூ.37,902,087.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2814
சீட்டிழுப்பு திகதி 2025.05.25 தினம் ஞாயிற்றுக்கிழமை
07 42 72 78 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,024,345.60
DLB

சனிதா
திகதி 25.05.2025 வெற்றி வாரம் 4975
26 36 45 61 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,877,892.80
76818
DLB

சசிரி
690
25.05.2025 ஞாயிற்றுக்கிழமை
02 21 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4526
சீட்டிழுப்பு திகதி 25.05.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
05 17 24 46 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,134,031.60
243175
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 12 07 28 45 69
1990
25.05.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட்
DLB

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2640
சீ.டிழுப்பு திகதி : 2025.05.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,220,188.00
அத கோடிபதி ADAKOTIPATHI
09 20 42 66 M
307252
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

K.K.S கடற்கரையோரமாக 11 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 100 அடி வீதி முகப்பைக் கொண்டது. ஹோட்டல், Restaurant கட்டுவதற்கு மிகச் சிறந்த இடம்.

**Easy Real Estate**

**076 742 4301, 075 710 9639**

(4373)

## மணப்பெண் தேவை

1. புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, அனுஷம், MSc, Denmark Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52531)
2. கோண்டாவில், இந்து, 1978, ரோகினி, BE Electronic Engineer, Denmark Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (19890)
3. கரவெட்டி, இந்து, 1984, மிருகசீரிடம், BSc Engineering Netherland Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (33330)
4. இணுவில், இந்து, 1986, ரோகினி, Graduate, Norway Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (31506)
5. கொக்குவில், இந்து, 1990, விசாகம், Bio Engineering(OSLO), Norway Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (30569)
6. நயினாதீவு, இந்து, 1991, சதயம், Bachelor, Newzealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (28920)
7. அல்வாய் - மீசாலை, இந்து, 1987, பூசம், BSc in Engineering, Newzealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (27858)
8. உரும்பிராய், இந்து, 1979, கேட்டை, Travel and Tourism Management, Divorce, Newzealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
9. திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், BSc in Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34159)
10. நீர்வேலி, இந்து, 1992, அவிட்டம், Bachelor UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

(C-3048)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| ➢ வாடிக்கையாளர் சேவை அதிகாரி | : 0772741206 |
| ➢ Midwife | : 0773618559 |
| ➢ Room Boy | : 0761313000 |
| ➢ Marketing Coordinator | : 0772741206 |
| ➢ Photocopy ,Typing,Printing | : 0773138881 |
| ➢ கோத்து றைஸ் போடுபவர் | : 0774078235 |
| ➢ Marketing Executive | : 0771587186 |
| ➢ பணிப்பெண் | : 0754702518 |
| ➢ Business Advisor (Online/Part Time) | : 0779969661 |
| ➢ Receptionist (Jaffna) | : +41763254120 |
| ➢ Sales Executive(BDM) | : 0771298168 |
| ➢ CCTV Camera பொருத்துனர் | : 0775527099 |
| ➢ All-Rounder Staff | : 0760709751 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு: **dewmasweb.com**

வேலையாட்கள் தேவையா : **0760984532**

**DEWMAS**, 51, Amman Road, Nallur, Jaffna

(4376)


## ஜூன்...

161 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்குரிய வர்த்தமானி அறிவிப்பு அச்சிடுவதற்கான விபரங்கள் அரச அச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சிக்கலுக்குரிய 178 உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த கட்டத்தில் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம-4,7)


## வாடகைக்கு

இரண்டு கடைகள் வியாபாரத்திற்கு அல்லது களஞ்சியப்படுத்தலுக்கு ஏற்றது.
முன்னர் வியாபார நிலையமாக (Super Market) இயங்கியது.
இத்துடன் சேர்ந்த வேறு ஒரு அறை வேலைத்தளமாக இயங்குவதற்கு ஏற்றது.
அமைவிடம் : சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி

தொடர்பு : **077 617 3927**

(C-3045)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்


## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்


வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3042)

**076 825 7716** (ஆகாஸ்)

சுத்தமான, சுகாதாரமான முறையில் பறிக்கப்பட்ட தரமான வேப்பம்பூ கொள்வனவு செய்யப்படும்

கொள்வனவு விலை **1Kg - 400/-**


தேவைப்படும் அளவு **100 Kg**



மொத்தமாகவோ அல்லது சிறு அளவிலோ கொள்வனவு செய்யப்படும் (C-3043)

தொடர்புகளுக்கு : **077 590 2467**


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சபாபதி நவரத்தினம்

திதி - சதுர்த்தசி 26.05.2025

ஓடி மறைந்தது ஓராண்டு
வாடி நிற்கிறோம் உமை இழந்து
நாடிச் சென்றீர் இறைபதமே
கூடி வேண்டுகிறோம் நீர் சாந்தியடைய
காலச் சக்கரமோ சுழன்று போனது
நாளும் பொழுதும் உம் நினைவே சூழ்ந்தது
பாலை நிலமாய் மனதும் வரண்டது
கோலம் இழந்து சோகம் நிலைத்தது
இறைவன் பதமே என்றும் நீர்
நிறைவாய் குருவாய் அமர்ந்திருக்க
முழுதாய் அவரை வேண்டுகின்றோம்
மனதில் என்றும் நிறைந்திருப்பீர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"குமர கோட்டம்"
மானிப்பாய் வீதி, கோப்பாய்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உறவினர்

(4379)


## வேலைக்கு ஆட்கள் தேவை

"மாருதம்" உணவகத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. (ஆண்கள் மாத்திரம்) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்)

**077 275 9799**

(4378)

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

- குறைந்த விலை - நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**077 836 3050**
**077 305 8782**

(C-3041)

## Travels and Tours

Canada, UK, France, Australia, Korea, Newzealand, Romania மற்றும் சகல நாடுகளுக்குமான விசாக்கள் பெற்றுத் தரப்படும்.

- Air Ticketing
- Travel Insurance
- Police Clearance
- Vfs appointment செய்து கொள்ளலாம்

**077 413 4528**

யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், வவுனியா

(1170)


## சிங்காரவேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானம்



### மாதாந்த அமாவாசை தின ருத்ர ஹோம வழிபாடும் அன்னதானமும்

நேசம் நிறை நெஞ்சத்தீர்!

வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள சிங்காரவேலன் சிவகாயத்ரி சந்நிதானத்தில் மாதாந்த அமாவாசை தின ருத்ர ஹோம வழிபாடு இன்று (26.05.2025) திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**காலை 6 மணிமுதல் இறுதி யுத்தத்தில் இறந்த மக்களின் ஆத்ம சாந்தி வேண்டி திருவாசக முற்றோதல் நடைபெறும்.**

உற்சவ விபரம்

**கும்ப பூஜை - காலை 09.00 மூலஸ்தான பூஜை - காலை 11.00**

தொடர்ந்து உபயகாரர்களின் குடும்ப பிதிர்களுக்கான தர்ப்பண வழிபாடுகள் நடைபெறும். பூஜைகள் நிறைவடைந்ததும் நண்பகல் 12.00 மணியளவில் அன்னதானம் வழங்கப்படும்.

உபயம் :
திரு.திருமதி கண்ணன் கீத்தா
குடும்பம் (U.K)

இங்ஙனம்
கௌரவ கலாநிதி ராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதம குருவும்
ஆதீன கர்த்தாவும் மேற்படி தேவஸ்தானங்கள்

"தெளிவே எம் சிந்தனை"

(C-3044)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org